padippakam

# இஸ்ரேலின் உருவாக்கம்




ஞா. சிறிமனோகரன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# இஸ்ரேலின் உருவாக்கம்

ஞா. சிறிமனோகரன்

புதிய பூமி வெளியீட்டகம்

படிப்பகம்

padippakam

நூல் : இஸ்ரேலின் உருவாக்கம்

பதிப்பு : மே 2011

வெளியீடு : புதியபூமி வெளியீட்டகம்

அச்சுப்பதிப்பு: வேள்ட் விஷன் கிறபிக்ஸ்
இல. 5, முதலாவது மாடி
2வது ரோகிணி ஒழுங்கை
கொழும்பு-11

தொ.பே : 0773783614

விலை : ரூ.200.00

---

Title : ISRAELIN URUVAAKKAM

Edition : May 2011

Published by : Puthiya Poomi Publishers

Printed by : World Vision Graphics
No. 5, 1st Floor
2nd Rohini Lane
Colombo-11

Mobile : 0773783614

Price : Rs. 200/=

**முன்அட்டை** : 1946ல் இருந்த பலஸ்தீன நிலபரப்பும் 2000ம் ஆண்டில் இருக்கும் இஸ்ரேலாக மாற்றப்பட்ட நிலப்பரப்பையும் காட்டுகிறது.

**பின்அட்டை** : இஸ்ரேலியர்கள் மேற்குக் கரையில் கட்டி எழுப்பியுள்ள தடைச் சுவர்

படிப்பகம்

padippakam

## சமர்ப்பணம்

அன்பு பண்பு
மனித நேயம்
மக்கள் சார்பு
மாக்சிசம்
குடும்ப வாழ்வு
என்னுள் நிலைத்து
நீடிப்பதற்கு
அடியாதாரமாய்
இருந்த என்
தாய் தந்தைக்கு
இந் நூல்
சமர்ப்பணம்

படிப்பகம்

padippakam

# உள்ளடக்கம்:


முன்னுரை

மதிப்புரை

பதிப்புரை

1. யூதமதமும் யூதமக்களும் 18-20

2. அடிமைத்தளையிலிருந்து விடுதலை - முரண்பாடான நிலைப்பாடுகள் 21-25

3. பைபிள் கூறும் வரலாறு 26-32

4. யூதர்களை முதன்முதலில் துரத்தியவர்கள் கிறீஸ்தவர்களே 33-36

5. இஸ்ரேலின் உருவாக்கமும் பிரித்தானியாவின் சூழ்ச்சியும் 37-47

6. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தோற்றமும் எதிர்காலமும் 48-53

இணைப்பு-1
இஸ்ரேலைப் பின்பற்றித் தனிநாடு கோரியவர்கள் 54-57

இணைப்பு-2
பலஸ்தீனத்தில் ஒரு சுதந்திர நாடு உருவாக்கும் பணியில் முற்போக்குச் சக்திகளின் பங்கு 58-60




படிப்பகம்

padippakam

# முன்னுரை

எனக்கு 2010ம் ஆண்டில் சில மாதங்கள் பிரிட்டனின் வேல்ஸ் பகுதியில் மகளுடன் தங்கியிருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் தங்கியிருந்த வீட்டில் இருந்து சுமார் அரை மணி நேரம் நடந்து செல்லும் தூரத்தில் அமன்போட் (Ammanford) நகரம் இருக்கிறது. அங்கே ஒரு பொது நூலகம் உண்டு. தினமும் காலையில் அங்கு சென்று சுமார் நான்கு மணிநேரம் செலவிட்டேன்.

உண்மையைச் சொல்வதென்றால் இஸ்ரேல் பற்றிய ஒரு தேடலைச் செய்வேன் என எதிர்பார்க்கவில்லை. நூலகத்தில் சில நாட்கள் தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தேன். பத்திரிகைச் செய்திகள் என்னைக் கவரவில்லை. ஒரு நாள் தற்செயலாக அங்குள்ள நூல்களைத் தட்டிப் பார்த்தேன். 'சேர்ச்சிலும் யூதர் களும்' என்ற நூல் என் கண்ணிற் பட்டது.

அதை எழுதியவர் மாட்டின் கில்பேட் (Martin Gilbert) என்பவர். அவர்தான் சேர்ச்சிலின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதுவதற்கு அமர்த்தப்பட்ட உத்தியோகபூர்வ எழுத்தாளர் என அந் நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நூலை வாசித்த பின்பே இஸ்ரேல் பற்றிய கட்டுரையொன்றை எழுத வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. தேடித் தேடி இஸ்ரேல் சம்பந்தமாகப் பல நூல்களை வாசித்தேன்.

நான் 1960ல் உயர்தர வகுப்பில் யாழ் இந்துவில் கல்வி கற்ற சமயம் அங்குள்ள நூலகத்திற்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளனாயிருந்த எனக்கு அந் நூலகத்தில் ஆங்கிலத்தில் இருந்த மார்க்சிச நூல்களை வாசிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. ஆங்கில மூலமாகக் கல்வி கற்றதாலும் ஆங்கில



படிப்பகம்

padippakam

ஆசிரியராக மு. கார்த்திகேசன் இருந்ததாலும் அடிப்படை மார்க்சிச அறிவைப் பெற்றுக் கொள்ள அந்த நூல்கள் உதவின.

1963ம் ஆண்டில் வேலை தேடும் முயற்சியில் கொழும்பில் இருந்தேன். அப்போது அப்போதிக்கரியாவதற்குரிய அனுமதிக்கான பரீட்சை எழுதினேன். அதில் தோல்வி கண்டேன். யாழ்ப்பாணத்தில் எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள நண்பர் பரீட்சையில் தெரிவானார். இது தொடர்பாக அம்மா எனக்குக் கடிதம் எழுதும் போது சோசலிசப் புத்தகங்களை படித்த நேரம் சோதினைக்குப் படித்திருக்கலாம் என்று எழுதினது இன்றும் ஞாபகம் உள்ளது.

கொழும்பில் ஆறு மாதம், தினம் ஒன்றிற்கு நான்கு ரூபாய் சம்பளத்தில் வேலை செய்த நான் 1963 பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்து யாழ் வந்தேன்.

1964ல் இருந்து அனேகமான சந்தர்ப்பங்களில் தலையாளியில் மார்க்சிச வகுப்புகள் இடம்பெற்றன. அதில் கார்த்திகேசன், ஜனகன், டானியல் போன்றோர் பங்கு பற்றினர். இந்த வகுப்புகள் மூலம் மார்க்சிச அறிவை ஓரளவு பெற முடிந்தது. அக்கால கட்டத்தில் பீக்கிங் றிவியூ மூலம் மார்க்சிச அறிவை விருத்தி செய்ய முடிந்தது. அதே சமயம் உலக நிகழ்வுகளை மார்க்சிசக் கண்ணோட்டத்தில் பார்க்கவும் முடிந்தது.

1964 அளவில் பல தோழர்களின் நட்புக் கிடைத்தது. குறிப்பாக தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் தொடர்பால் அவரது அறிவுரை யின்படி எழுதத் தொடங்கினேன்.

அக் காலத்தில் மேடைகளில் இஸ்ரேல் பற்றிய பேச்சுக்கள் ஆங்காங்கே இடம்பெற்றன. எவ்வாறாயினும் அது தொடர்பாகத் தெளிவு இருந்திருக்கவில்லை. லண்டன் சென்று பத்துக்கு மேற்பட்ட நூல்களை வாசித்த பின்னரே இஸ்ரேலின் உருவாக்கம் பற்றி எழுத வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. கட்டுரையை எழுதத் தொடங்கி இலங்கை திரும்புவதற்குச் சில நாட்கள் இருக்கையிலேயே ஆங்கிலத் திலான பைபிளின் பழைய ஏற்பாட்டை வாசித்துக் குறிப்பெடுத்துக் கொண்டேன்.



படிப்பகம்

padippakam

அந்த நூலகத்தின் கீழ்த் தளத்தில் ஏராளமான நூல்கள் இருந்தன. இருந்து வாசிப்பதற்கு ஒரேயொரு கதிரை மட்டும் இருந்தது. பக்கத்தில் சிறுவர் நூலகம் இருந்தது. அங்கே அவர்க ளுக்கான நூல்களும், மேசை, கதிரைகளும் இருந்தன.

மேல்த் தளத்தில் ஏகப்பட்ட புத்தகங்களும் தினசரிப் பத்திரி கைகளும், இருந்து வாசிப்பதற்கு பல மேசைகளும் கதிரைகளும் இருந்தன. கீழ்த் தளத்தில் உள்ள நூலொன்றிலிருந்து குறிப்பெடுக்க வேண்டுமானால் கதிரைக் கையில் வைத்தே அதைச் செய்ய முடியும். மேல்த் தளத்தில் அந்தப் பிரச்சினை இருக்க வில்லை. மேல்த் தளத்தில் பைபிள் இருந்தது.

அங்கு மிகவும் மலிவான விலையில் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த நூல்களில் யூத மதம், உலக மதங்கள், அரபு இஸ்ரேலிய யுத்தம் என்பன சம்பந்தமான நான்கு நூல்களை வாங்கினேன். நூலகத்தில் எடுத்த குறிப்புக்களிலிருந்தும், வாங்கிய நூல்களி லிருந்தும் ஒரு கட்டுரையை எழுதி நண்பர் சி.கா. செந்திவேலுக்கு அனுப்பியிருந்தேன். கட்டுரையைப் 'புதிய பூமி'யில் வெளியிடும் நோக்கமே முதலில் இருந்தது. அதை விரிவாக எழுதி ஒரு நூலாகப் பிரசுரித்தால் பயன் அதிகம் எனச் செந்திவேல் கூறிய ஆலோசனையின் விளைவாகவே இந்த நூல் வெளியாகிறது. ஒரு நண்பர் மூலமாக பைபிளின் தமிழ்ப் பிரதியொன்று கிடைக்கப் பெற்றமை எனக்குப் பேருதவியாயிற்று.

நான் வாசித்த நூல்களில் ஏகப் பெரும்பாலானவை யூத மக்களின் பிரச்சினையை 1897ம் ஆண்டு ஆகஸ்ட் 29ம் திகதி சுவிற்சலாந்தின் பாஸில் (Basle) மகாநாட்டிலிருந்து ஆரம்பித் திருந்தன. அது மட்டு மல்லாமல் முதலில் கனன் (Canan) நாடாக அறியப்பட்டுப் பின்னர் இஸ்ரேல் என அறியப்பட்ட நாடு யூதர்களின் பூர்விக நாடு என்ற தோற்றப்பாடே அக் கட்டுரைகளிற் காணப் பட்டது. யூதர்கள் தொன்று தொட்டு வாழ்ந்த நாடென்றே பலரும் கருதும்படியாக எழுதப்பட்ட அக் கட்டுரைகளில், கடவுள் சாட்சிக்கு வரவழைக்கப்பட்டிருந்தார். யூதர்களின் மூதாதையர் எனப்பட்ட ஏபிரகாம், அவரது மனைவி,



படிப்பகம்

மோசஸ், மோசஸசின் மனைவி ஆகியோர் பிறப்பால் யூதர்கள் அல்ல. பிற்காலத்தில் அவர்களே யூத மதத்தைத் தோற்றுவித்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

நான் விடயத்தை யூத மதத்தின் தோற்றத்திலிருந்து ஆரம்பித் துள்ளேன். இந்த விடயத்தில் அக்கறையுள்ளவர்கள் பைபிளின் பழைய ஏற்பாட்டை வாசித்துத் தெரிந்து கொள்வது பயனுள்ளது.

லத்தீன் மொழியில் உள்ள 'Religio' என்ற சொல்லிலிருந்தே 'Religion' என்ற ஆங்கில சொல் உருவானது. ஆங்கிலத்தில் றிலிஜன் என்பது கடவுளைப் பூஜித்தல் என்று பொருள்படும். அதற்கு மூட நம்பிக்கையென்றும் பொருள் உண்டு.

இஸ்ரேலின் உருவாக்கம் மதத்தின் போர்வையில் ஏகாதிபத்திய வாதிகளால் மேற்கொள்ளப்பட்டது. ஒரு தேசிய இனம் என்ற வகை யில் இஸ்ரேல் உருவாக்கப்படவில்லை. மதம் பற்றிப் பிரமுகர்கள் சிலரின் கருத்துக்கள் பின்வருமாறு:

"மதம் என்பது ஒடுக்கப்பட்ட பிராணியின் பெருமூச்சு. இதயமற்ற உலகின் உணர்வு. உயிரற்ற சூழலில் உயிர். அது மக்களுக்கு அபின்." - கார்ல் மார்க்ஸ்.

"குழந்தைகளைப் பீடித்த நரம்பியல் வியாதி போல மதமும மனித சமுதாயத்தைப் பீடித்த நரம்பியல் வியாதி. இந்தக் கருத்து சரியென் றால் வளர்ச்சிப் போக்கில் சமுதாயம் மதத்தை விட்டு விலகிச் செல்லுமென எதிர்பார்க்கலாம்." - சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud)

முடிந்தளவு விளங்கக்கூடிய வகையில் தகவல்களைத் தந்துள்ளேன். நூலை அளவிற்குப் பெரிதாக்காமல் மட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்குடனும் இந்த ஆக்கம் அமைந்துள்ளது.

தமிழ் வடிவில் உள்ள பைபிளிலிருந்து மேற்கோள் காட்டப் பட்டவற்றை பைபிள் தமிழிலேயே தந்துள்ளேன் என்பதைக் குறிப்பிட் டாக வேண்டும். ஆயிரம் வருடங்களுக்கு முன் உள்ள ஆங்கில இலக்கியத்தை இன்று வாசித்து விளங்குவது கடினம் என ஆங்கில மொழி அறிஞர்கள் கூறுவர். அதே போலவே பைபிள் தமிழும்

padippakam

விளங்கிக் கொள்ளக் கடினமானது.

இந் நூலுக்கான முன்னுரையையும் இஸ்ரேலின் சமகால நிலை பற்றிய பயனுள்ள சில தகவல்வகளையும் தந்துதவிய கலாநிதி சி. சிவசேகரத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

பல ஆலோசனைகளைத் தந்து இந் நூல் வெளியாவதற்கு ஊக்கமளித்த நண்பர்கள், சி.கா. செந்திவேல், சோ. தேவராசா ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

இந் நூல் வெளியாவதற்குப் பல்வேறு வழிகளில் உதவியவர்கள், ஆலோசனைகளைக் கூறியவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

ஞா. சிறிமனோகரன
2011.01.25

குரும்சிட்டி மேற்கு
தெல்லிப்பளை

தொடர்பு முகவரி:
15, தம்மாதார மாவத்தை
இரத்மலானை



படிப்பகம்

padippakam

# மதிப்புரை

பலஸ்தீனப் பிரச்சினை இன்றைய உலகின் மக்கள் போராட்டங்கள் அனைத்தையும் அடையாளப்படுத்துகிறது என்ற கருத்து உலகின் முற்போக்குச் சிந்தனையாளர்கள் பலராலுங் கூறப்பட்டுள்ளது. பலஸ்தீனப் பிரச்சினையின் தீர்வே மத்திய கிழக்கின் அரசியல் நெருக்கடிகள் அனைத்தினதும் தீர்வுக்கான திறவுகோல் என்று சில சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுவ திலும் உண்மை மிக உண்டு. பெற்றோலிய எண்ணெயிலிருந்து பெறப்படும் எரிபொருட்களே நவீன உலகின் வாகனங்கள் முதலாக மின்சார நிலையங்கள் வரை அனைத்திலும் ஆதிக்கம் செலுத்து கின்றன. உலகப் பொருளாதாரம் மிக அதிகமாகத் தங்கியுள்ள கனிப்பொருளாக எண்ணெய் உள்ளது. உலகின் பெறக் கூடிய எண்ணெய் வளத்தின் மிகப் பெரும் பகுதி மத்திய கிழக்கில் இருப்பதே மத்திய கிழக்கின் சர்வதேச அரசியல் முக்கியத் துவத்தின் காரணமாகும். உலக எண்ணெய் வளத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஏகாதிபத்தியப் பெருவல்லரசு ஒவ்வொன்றினதும் தவிர்க்க இயலாத தேவையாக இருந்து வந்துள்ளது. முதலாம் உலகப் போருக்குப் பின்பு இத் தேவை மேலும் வலுப் பெற்றது. பிரித்தானியாவும் பிரான்சும் அப்போது ஆதிக்கஞ் செலுத்திய மத்திய கிழக்கில் இரண்டாம் உலகப் போர் ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. அமெரிக்கா உலகின் தலையாய ஏகாதிபத்திய வல்லரசாக வளர்ந்ததையொட்டி மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நேரடியான அரசியல், பொருளாதார ஆதிக்கமும் இராணுவக் குறுக்கீடுகளும் வலுத்தன. அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து ஈரானில் 1956இல் ஒரு சனநாயக ஆட்சியைக் கவிழ்த்த பின்னர் அமெரிக்காவின் ஆதரவை நாடுகிற நிலைக்கு அரபுலகின் சர்வாதிகார முடியாட்சிகள் யாவும் தள்ளப்பட்டன. பிரிட்டனினதும் பிரான்சினதும் செல்வாக்கு சுயெஸ் கால்வாயின் தேசிய மயமாக்கலுடன் தேய்ந்து செல்கையில் அமெரிக்கா வேகமாவே



படிப்பகம்

padippakam

அவற்றின் இடத்தைப் பிடித்துக் கொண்டது.

உலகளாவிய ஏகாதிபத்திய விரோத கொலனிய விரோதப் போராட்டங்கள் இரண்டாம் உலகப் போரின் பின்பு எழுச்சி பெற்றன. அதன் பின்னணியில் மத்திய கிழக்கில் ஏற்பட்ட சில ஆட்சி மாற்றங்கள் முடியாட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தன. அந்த ஆட்சி மாற்றங்கள் முழுமையான ஒரு சமுதாய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கத் தவறிய போதும் மத்திய கிழக்கில் மேலை நாடு களின் ஆதிக்கத்திற்குத் தடையாகவே இருந்து வந்தன. அக் காலத்தில் சோவியத் யூனியனின் சோஷலிஸ ஆட்சியில் சீர்குலைவுகள் தொடங்கிவிட்டன. உலகின் புரட்சிகர இயக்கங்கட்கு ஒரு வலிய ஆதாரமாக இருந்து வந்த சோவியத் யூனியன் குருஷ்ச்செவ்வின் தலைமையின் கீழ் அமெரிக்காவுடன் சமரசம் காணவும் ஏகாதிபத்திய விரோதச் சக்திகளை அமெரிக்காவுடனான தனது உலக மேலாதிக்கப் போட்டியில் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தவும் தொடங்கியது. அதன் விளைவாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தவறான வழி காட்டலால் ஈரானிலும் அரபு நாடுகள் பலவற்றிலும் இருந்து வந்த கம்யூனிஸ்ட்டுக்கள் வலு விழக்கத் தொடங்கியதுடன் அவர்களுடன் முதலில் நட்புப் பாராட்டிய அரபுத் தேசியவாதத் தலைமைகளால் அழிக்கப்படவும் நேர்ந்தது.

அமெரிக்க-சோவியத் மேலாதிக்கப் போட்டி மத்திய கிழக்கில் எண்ணெய் வளத்தின் மீது அமெரிக்க ஆதிக்கத்திற்கு ஒரு தடையாகவே இருந்தாலும் ஈராக் மட்டுமே நேரடியான அமெரிக்கச் செல்வாக்கிற்குட்படாத எண்ணெய் வளமுள்ள அரபு நாடாக இருந்தது. எனவே அமெரிக்காவின் கவனமெல்லாம் அராபியத் தீபகற்பத்தின் மீதான தனது இரும்புப் பிடியை விடாமற் பேணுவ திலும் அந்த அரபு நாடுகளுக்குள் தனக்குப் பாதகமான ஆட்சி மாற்றம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுவதற்கு இஸ்ரேலை ஒரு பலமான கருவியாகவும் பயன்படுத்துவதாகவே இருந்தது.

சொல்லப்போனால், 1967ம் ஆண்டு நடந்த ஆறு நாள் யுத்தத்தில் இஸ்ரேல் பெற்ற வெற்றிக்குப் பின்னர் இஸ்ரேலை மத்திய கிழக்கில் அமெரிக்காவின் 'பொலிஸ்காரன்' என்ற தரத்துக்கு உயர்த்துவதில் அமெரிக்கா அக்கறை காட்டியது. எகிப்தில் நாசரின் சாவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சதாத் அமெரிக்கச் சார்பான ஒரு போக்கைக் கடைப்பிடித்தார். 1973ம் ஆண்டு எகிப்து போரின் மூலம் இஸ்ரேலிடம் ஆறு ஆண்டுகள் முன்னர் இழந்த பிரதேசங்களை மீளப் பெற்றாலும் அதன் பொருளாதார நலிவு அதை அமெரிக்காவின் மீது தங்கி



படிப்பகம்

padippakam

யிருக்குமாறு செய்தது. பொதுவாகவே 1970களின் பிற்பகுதி யிலிருந்து மூன்றாம் உலகின் தேசியவாதத் தலைமைகளைப் பணியச் செய்வதில் ஏகாதிபத்தியம் வெற்றி பெற்றது எனலாம். அரபு நாடுகளிடம் இருந்த எண்ணெய் வளம் எனும் ஆயுதத்தை மேலைநாடுகள் வலுவிழக்கச் செய்யுமளவுக்கு, அரபு நாடுகளிடையிலான உட்பூசல்களும் சவூதி அராபியா மீதான அமெரிக்கச் செல்வாக்கும் பயன்பட்டன.

அக் காலகட்டத்துடன், அரபு நாடுகள், குறிப்பாக அராபியத் தீபகற்ப நாடுகளும் எகிப்தும் ஜோர்டானும், பலஸ்தீன மக்கள் மீது காட்டிய அக்கறை போலியானது என்பது தெளிவாயிற்று. எனினும் பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் பிளவுபட்டுத் தமது இருப்பிற்கு அண்டை அரபு நாடுகளின் ஆதரவிலும் தங்கியிருக்கும் நிலைக்குத் தாழத் தொடங்கிவிட்டன.

இத்தகைய சூழலிலேயே இஸ்ரேல் பலஸ்தீன மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் தீவிரமாயிற்று. சோவியத் யூனியனின் சரிவின் பின்பு இஸ்ரேல் பலஸ்தீனத்தில் தனது அப்பட்டமான நிலப் பறிப்புக் கொள்கையைத் தீவிரமாக்கியது. இச் சூழலிலேயே பெரும் பாலான அராபிய அரசாங்கங்களின் வஞ்சகத்திற்கும் ஏனையவற்றின் இயலாமைக்கும் நடுவே அமெரிக்காவின் கூச்சநாச்சமற்ற ஆதரவைப் பெற்ற இஸ்ரேலிற்கு எதிராக எவ்விதமான போராட்டத்தையும் முன்னெடுக்க இயலாத நிலைக்கு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமை தள்ளப்பட்டது. 1970களின் பிற்பகுதியில் ஐ.நா. சபை அங்கீகரிக்கும் அளவுக்கு வளர்ச்சிபெற்ற ஒரு விடுதலை இயக்கமான பலஸ்தீன விடுதலை இயக்கம், பத்தாண்டுகளின் பின்னர் மக்களைப் போராட்டப் பாதையில் முன்னே செலுத்துவதற்கு இயலாமல் தடுமாறலானது. அப் பின்னணியிலேயே இன்ற்றி∴பாடா எனும் வெகுசன எதிர்ப்பியக்கம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களைத் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கியது. 'பயங்கரவாதச்' செயல்களை முறியடித்ததாக வீரங்காட்டிய இஸ்ரேலியப் படையினரால் கல்லெறியும் சிறுவர்களையும் தெருவில் இறங்கிக் கோஷமெழுப்பிய பெண்களையும் சமாளிக்க இயலவில்லை.

போரால் இயலாததை இஸ்ரேல் அமெரிக்க உதவியுடன் பேச்சு வார்த்தைகள் மூலம் சாதித்தது. பலஸ்தீன மக்களுக்குத் தமது நாட்டுக்குத் திரும்பிவந்து குடியேறும் உரிமை என்ற அடிப்படையான பிரச்சினையைத் தவிர்த்தே ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. யாஸிர் அர∴பாத் என்ற பலஸ்தீன மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட பலஸ்தீன விடுதலை இயக்கத்தினதும் அல் ∴பத்தாஹ்



படிப்பகம்

padippakam

அமைப்பினதும் தலைவர் செய்த வரலாற்றுத் தவறு அந்த உடன் படிக்கையாகும்.

ஒஸ்லோ உடன்படிக்கை சமாதானத்தைக் கொண்டு வரத் தவறியதுடன் பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த எதையுமே செய்யவில்லை. அமெரிக்கா உலகின் ஒரே பெருவல்லரசாக இருந்து வந்துள்ள கடைசி இரண்டு தசாப்தக் காலத்தினுள்ளும் இஸ்ரேல் பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் பெருமளவிலான யூதக் குடியேற்றங்களை மேற் கொண்டு நிலப் பறிப்பைத் தொடர்ந்து வந்துள்ளதுடன் காஸாப் பகுதியில் வாழும் மக்கள் மீது கொடுமையான வன்முறையை நடத்தி வந்துள்ளது. இஸ்ரேலின் நடத்தை உலக மக்கள் நடுவே அதற்கெதிரான எண்ணங் களை வலுவாக்கியுள்ள போதிலும அமெரிக்காவின் பாதுகாப்புக் காரணமாக இஸ்ரேல் தான் நினைத்தவாறே நடந்து வருகிறது.

பலஸ்தீனப் பிரச்சினையின் தீர்வு தனியே இஸ்ரேலுடன் தீர்த்துக் கொள்ளக் கூடியதோ, வெறுமனே அரபு மக்களினதோ முஸ்லிம் களினதோ பிரச்சினையல்ல. அது மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு கேந்திர மையமாக விளங்குகிற இஸ்ரேல் என்னும் இராணுவ மையம் பற்றியதாகும். அதில் முஸ்லிம்கட்கும் அராபியர்கட்கும் எதிரான அமெரிக்க-மேற்குலக ஆதிக்கச் சிந்தனையும் ஒரு பங்கு வகித்தாலும் ஒடுக்குமுறையாளர்களுக்கு உடந்தையாக இருந்து வந்துள்ளவர்கள் அப் பிரதேசத்தின் அதி வலிய முஸ்லிம் அரபு நாடுகளின் ஆட்சியாளர்களாவர். ஈரானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் ஈரானிய அரசைப் பலஸ்தீன மக்களுக்குச் சாதகமாக மாற்றியுள்ள போதிலும் ஈரானின் இஸ்லாமிய ஆட்சி ஈராக்குடனான போரின் போது, இஸ்ரேலுடன் இரகசியமாக ஒத்து ழைத்தது. (ஈரான்-கொன்ற்ரா விவகாரம் எனக் கூறப்படும், நிக்கரா குவாவில் அமெரிக்கக் கூலிப்படைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை). இப்போது துருக்கிக்கும் இஸ்ரேலுக்கும் முரண்பாடுகள் வலுத்துள்ளன.

நம் கவனத்துக்குரியது ஏதெனின், துருக்கியாலோ ஈரானாலோ எந்த அரபு நாட்டினாலுமோ இஸ்ரேலிய அடக்குமுறையையும் ஆக்கி ரமிப்பையும் முறியடிக்க இயலாது. எனினும் அரபுலகில் ஏற்பட்டு வருகிற மாற்றங்கள் பலஸ்தீன மக்களுக்குச் சிறிது ஆதரவானவை என்ற அளவில் வரவேற்கத்தக்கவை. எனினும் மத்திய கிழக்கின் ஆட்சி மாற்றங்கள் முழுமையான ஏகாதிபத்திய மறுப்பைக் கொண்டனவாக அமையாதளவில் பலஸ்தீன மக்களது போராட்டம்



படிப்பகம்

padippakam

கடினமானதாகவே இருக்கும்.

குறிப்பிடத்தக்க விதமாகப் பலஸ்தீனப் பிரச்சினை அரபுப் பயங்கரவாதப் பிரச்சினையாகவே சித்தரிக்கப்பட்டு வந்துள்ளது. 9-11 எனப்படும் நிகழ்வின் பின்பு அதை முஸ்லிம் அடிப்படைவாதப் பயங்கவாதம் எனப்படுவதுடன் இணைத்துப் பார்க்கும் ஒரு போக்கும் உருவாகியுள்ளது. இது மிகவும் விஷமத்தனமானது.

இஸ்ரேலின் ஒவ்வொரு கொடுமையையும் பலஸ்தீனப் பயங்கரவாதிகளது வன்முறைக்கு எதிரான பதிலடியாகவே சித்தரிப்பதில் மேற்கின் பெரும் ஊடகங்கள் பெரும் பங்கு வகித்து வந்துள்ளன. அதற்கு எதிரான நியாயத்தின் குரல்கள் வெகு சிலரிடமே போய்ச் சேருகின்றன. அதற்கேற்றாற் போல நமது பிரதான ஊடகங்களும் மொழி வேறுபாடின்றி மேற்குலகின் எண்ணங்களையே பிரதிபலிக்கின்றன.

சிங்கள மக்கள் நடுவே பலஸ்தீனம் பற்றியுள்ள சிறிதளவு புரிந்துணர்வு, பலஸ்தீன மக்களை ஒத்த நிலையிலேயே உள்ள தமிழரிடம் இல்லாமை வருந்தத்தக்கது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியவாதிகள் தமிழரிடையே நிலை நிறுத்தியுள்ள இஸ்ரேலிய சார்பான பொய்களை எதிர்கொள்ளும் ஒரு வலுவான தேவை உள்ளது. நண்பர் சிறிமனோகரனின் கவனமான ஆய்வின் பயனாக உருவாகியுள்ள இந்த நூல் அத் தேவையை நிறைவு செய்ய ஒரு நல்ல பங்கை அளிக்கும் என்பது என் நம்பிக்கை.

இந்த நூலில் அவர் ஆய்ந்தறிந்து கூறியுள்ள பல உண்மைகள் இஸ்ரேல் பற்றிப் புனையப்பட்டுள்ள பொய்த்திரைகளை நீக்க உதவும். எனவே நாம் நூலாசிரியரை அவரது இம் நன் முயற்சிக்காகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இந்த நூல் தமிழ் மக்களின் விடுதலை பற்றிப் பேசும் அனைவரும் கவனமாகப் படித்து விளங்கிக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

சி. சிவசேகரம



படிப்பகம்

padippakam

# பதிப்புரை

கடந்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டு உலக வரைபடத்தில் அதற்குரிய இடம் வரையப் பட்டது. அத்துடன் ஐ.நா. சபையில் ஓர் அங்கத்துவ நாடாகவும் அங்கீகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இஸ்ரேலின் உருவாக்கம், இருப்பு, அதன் செயற்பாடு பற்றிய வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இலங்கையில் பெரும்பான்மையான சிங்கள, முஸ்லீம் மக்கள் மத்தியில் இஸ்ரேல் பற்றிய சாதகமான கருத்துக்களும் கண்ணோட்டங்களும் இருந்ததில்லை.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இஸ்ரேல் பற்றிய சாதகமான கருத்துக்களே பரப்பப்பட்டு வந்தன. அதாவது உலகம் பூராவும் இருந்து வந்த யூதர்களுக்கு ஒரு நாடு உருவாக்கப்பட்டமை பற்றி வியந்து கூறப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட நாட்டை யூதர்கள் தமது பொருள்வளத்தாலும் அறிவு ஆற்றல்களாலும் கட்டியெழுப்பி பாலைவனத்தின் மத்தியில் ஒரு சோலைவனமாக மாற்றி வைத்தி ருக்கிறார்கள் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. இவ்வாறு இஸ்ரேலை முன்னுதாரண நாடாகக் காட்டுவதில் தமிழ்த் தேசியவாதிகள், குறிப் பாகத் தமிழரசுக் கட்சியினர், முன் நின்றனர். இஸ்ரேல் போன்று தமிழர்களுக்கு இலங்கையில் தனி நாடு ஒன்று தோற்று விக்கப்பட வேண்டும் என்பது இத் தமிழ்க் குறுந் தேசியவாதிகளின் கனவாகவும் தூரத்து இலட்சியமாகவும் இருந்து வந்தது. இன்றும் கூட அந்தக் கனவு கலைந்ததாக இல்லை. நாடு கடந்த மேட்டுக்குடித் தமிழர்கள் மத்தியில் அது நீடித்து வருகிறது.

இஸ்ரேல் நாடு எவ்வாறு எதற்காக மத்திய கிழக்கின் அரபுலக நாடுகள் மத்தியில் ஏகாதிபத்திய நாடுகளினால் உருவாக்கப்பட்டது என்பது பற்றித் தமிழ் மக்களுக்குப் போதியளவு எடுத்துச் சொல்லப் படவில்லை. அதற்குத் தடையாகத் தமிழ்த் தேசியவாதிகள் இருந்து



படிப்பகம்

padippakam



சியோனிசத்தின் தந்தை எனப்படும் தியோடர் ஹெர்சல். இவர் 1896ல் "யூத அரசு" என்ற துண்டுப் பிரசுரத்தை முதன் முதலாக வெளியிட்டவராவர்.



ஜெருசலத்தில் உள்ள பாறைமேல் குவிந்த கோபுர மசூதி. இந்த மசூதியானது இஸ்லாத்தில் கூறப்பட்ட மூன்றாவது புனித தலம். இத் தலத்தை இஸ்ரேலியர் ஆக்கிரமித்துள்ளதால் முஸ்லிம் உலகம் கோபாவேசத்தில் இருந்து வருகிறது.

படிப்பகம்

padippakam



யூதர்களுக்கும் ஏகப்பெருமளவிலான முஸ்லீம் பாலஸ்தீன அராபியர்களுக்கும் இடையேயான மதக்குரோதம் மோதல்களைத் தோற்றுவித்தது. ஜெருசலத்தின் பாறைமேல் குவிந்த கோபுரத்திற்கு அண்மையில் 1920ல் இடம் பெற்ற கலவரமே இது. இப் பகுதியானது இஸ்லாத்திற்கும் யூதாயிசத்திற்கும் புனிதமானது எனக் கொள்ளப்படுகிறது.



இஸ்ரேலில் அராபியர்களுக்கு கஷ்டமான வேலைகள் வழங்கப்படுவதையும் பாரபட்சமாக நடந்தப் படுவதையும் எதிர்த்து அராபியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

படிப்பகம்

padippakam

## இயல் - 1

# யூத மதமும் யூத மக்களும்

**யூ**தமதம் எப்போது தோன்றியது? இதுபற்றிய தெளிவு இருந்தாலேயே யூதர்கள் பற்றி அறிந்து கொள்ளலாம். "யூதாயிசம்- ஒரு சிறிய முன்னுரை" என்ற தலைப்பில் நோர்மன் சொலமன் (Norman Soloman) என்பவார் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அவர் ஒக்ஸ்ஃபோட் பல்கலைக்கழக ஹீப்ரு மையத்தின் விரிவுரையாள ராகவிருந்தார். குறித்த நூல் 1996ம் ஆண்டு ஒக்ஸஃபோட் பல்கலைக்கழகப் பதிப்பகத்தால் வெளியிடப் பட்டது.

கி.பி. 1650ல் உஷர் (Bishop Ussher) என்ற பிஷப் (பேராயர்) ஆதாமும் ஏவாளும் கி.மு.4004ம் ஆண்டில் கடவுளால் படைக்கப்பட்டதாகக் கணிப்பிட்டிருந்தார்.

நவீன மனிதன் உருவான காலம் ஆகக் கிட்டியது இற்றைக்கு 15,000 ஆண்டுகள் முன்பாகும். ஆக முந்திச் சுமார் 16 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் தோன்றியிருப்பான் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மிருகங்களை வசப்படுத்தி வளர்க்கத் தொடங்கி மனிதன் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுச் சுமார் பத்தாயிரம் வருடங்களாவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதலாவது அரசு யூபிரட்டீஸ், ரைகிறிஸ் நதிகளுக் கிடையிலும் நைல் நதிப் பள்ளத்தாக்கிலும் கி.மு. 3250ம் ஆண்டளவில் உருவானதாகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இன்று யூதர்களும் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் தமது ஆன்மீகத் தோற்றுவாயாக (சிறு சிறு வேறுபாடுகள் காணப்படுகிற



படிப்பகம்

padippakam

போதும்) ஆதாம், ஏவாள், ஏபிரகாம், மோசஸ் என்போரைக் குறிப்பிடுகின்றனர்.

மனிதர்கள் எவ்வாறு தோற்றம் பெற்றார்கள் என்பது பற்றி அறிஞர்கள் கூறுவதை -குறிப்பாக சார்ல்ஸ் டார்வின் கண்டறிந்ததை- நாம் ஏற்றுக் கொள்வதாயின், யூத மதம் உலகின் புராதன மதம் அல்லவென்பது புலனாகும். ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டதாகக் கூறப்படும் காலத்திற்கு முன்பே மனிதர்கள் தோன்றிவிட்டனர் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

புராதன கற்கால மனிதர்கள் பல பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயற்கையை வழிபடும் முறையை மேற் கொண்டிருந்தனர். அவர்கள் சில சடங்குகளையும் மேற் கொண்டிருந்தனர். குகைகளில் அவர்கள் வரைந்த படங்களிலிருந்தும், இறந்தவர்களைப் புதைத்த போது செய்து வந்த சடங்குகளிலிருந்தும் நாம் இதைக் காணக்கூடியதாய் உள்ளது. மோசஸ் எகிப்திய அரண்மனையில் இளைஞனாக இருந்த போதே, எகிப்தும் அதன் வணக்கத் தலங்களும் பழமையானவையாயிருந்தன. எழுத்து வடிவில் கருத்தை வெளியிடும் முறை முதன் முதலில், கி.மு. 3100 அளவில் எகிப்திலேயே தோன்றியது.

பைபிளின் குறிப்பை நாம் நம்புவதாயின், "யூதாயிசம்" என்பதை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

கி.மு. 1800ம் ஆண்டளவில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படும் ஏபிரகாம் யூதர்களின் மூதாதை எனப்படுவதால், யூதமதம் கி.மு. 1800ல் ஆரம்பமான தெனக் கொள்ளலாமா? முஸ்லிம்கள் ஏபிரகாம், மோசஸ், யேசு, முகமது நபி ஆகியவர்களை இறைத் தூதர்களாகக் கருதுகின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஏபிரகாம் காலத்திற்குச் சுமார் நானூறு ஐநூறு வருடங்களின் பின் வாழ்ந்த மோசஸ், சினாய் (Sinai) மலை உச்சியில் கடவுளிடமிருந்து "பத்துக் கட்டளைகளை" உபதேசிக்கப் பெற்றதிலிருந்து யூதாயிசம் ஆரம்பமானதெனக் கொள்ளலாமா? அல்லது பழைய ஏற்பாடு எனப்படும் ஹீப்ரு வேத நூல் எழுதி முடிக்கப்பட்ட பின்னர், (கி.பி. 100 அளவில்) அது ஆரம்பமானதா?



படிப்பகம்

padippakam

இது ஒரு புறமிருக்க, இன்று நடைமுறையில் உள்ள யூதாயிசம் பைபிளில் குறிப்பிடட யூதாயிசத்திலிருந்து வேறுபட்டதென்பதை நாம் அவதானிக்க முடியும்.

இன்று நாம் காணும் யூத மதம் என்பது பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்தது என்பது நிச்சயமாகத் தவறான கருத்தாகும். யூத மதத்தின் "வேர்" எனப்படுவது பைபிளின் ஆரம்பகாலப் பழமை வாய்ந்ததென்ற முடிவிற்கு வேண்டுமானால் வரலாம்.

பைபிளின் பழைய ஏற்பாடு ஹீப்ரு மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டை ஹீப்ரு மொழியில் எழுதாதற்குக் காரணம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஹீப்ரு மொழி சமூக வழக்கற்றுப் போனதேயாகும். கி.மு. 5ம் நூற்றாண்டளவில் ஹீப்ரு மொழி வழிபாட்டிற்கும், வேத நூல்களுக்குமென மட்டுப்பட்டிருந்தமை கவனத்திற்குரியது. கி.பி. 405ம் ஆண்டில் பைபிள் லத்தீன் மொழியில் ஆக்கப்பட்டது.



படிப்பகம்

padippakam

## இயல் - 2

# அடிமைத்தளையிலிருந்து விடுதலை - முரண்பாடான நிலைப்பாடுகள்

கடவுள் சினாய் மலையில், பத்துக் கற்பனைகள் என்றும் கூறப்படுகிற பத்துக் கட்டளைகளை மோசசுக்கு வழங்கியதாக பைபிள் கூறுகிறது. அதிற் சில பகுதிகள் பின்வருமாறுள்ளன:

கடவுள் இவ்வாறு கூறினார்:-

"நான் தான் உனது கடவுள். நானே உங்களை எகிப்து நாட்டின் அடிமைத்தளையிலிருந்து விடுவித்து கொண்டு வந்தேன். என்னைத் தவிர வேறு ஒரு கடவுளும் இல்லை. நீவிர் விக்கிரக வழிபாட்டை மேற் கொள்ளலாகாது."

கடவுள் ஆறு நாட்களில் மேலுலகத்தையும் பூமியையும், கடலையும் அவற்றுள் அடங்கும் அனைத்தையும் படைத்து ஏழாம் நாள் இளைப்பாறினார். ஏழாம் நாளைக் கடவுள் ஆசீர்வதித்துப புனிதப்படுத்தினார்.

"நீவிர் விபச்சாரம் செய்யக்கூடாது, களவெடுக்கப்படாது, அயலவனுக்கு எதிராகப் பொய்ச்சாட்சி சொல்லப்படாது. அயலவனின் வீட்டின் மீது ஆசைப்படலாகாது. அயலவனின் மனைவி மீது ஆசை கொள்ளலாகாது. அயலவரின் ஆண் அல்லது பெண் அடிமையை, அல்லது மாட்டை அல்லது கழுதையை அல்லது அயலவனுக்குரிய எதன் மீதும் ஆசைகொள்ளலாகாது."

எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து யூதர்களை மீட்ட கடவுள், அயலவனின் ஆண் பெண் அடிமைகளின் வாழ்வைப் பற்றி ஏதும் கூறாததேன்? யூதர்கள் அடிமைகளைக் கொண்டிருத்தல், அது



படிப்பகம்

padippakam

சரியானதெனக் கருத இடமுண்டா? கனன் நாட்டை ஆபிரகாமின் சந்ததியினருக்கு கொடுத்த கடவுள், கனன் நாட்டில் சீவித்துக் கொண்டிருந்த மக்களைப் பற்றி ஏன் அக்கறைப்படவில்லை?

பைபிள் இது தொடர்பாகக் கூறுவதென்ன?

"கர்த்தர் மோசசை நோக்கி:- நீயும் எகிப்து தேசத்திலிருந்து நீ அழைத்துக் கொண்டு வந்த சனங்களும் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததியினருக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும், ஐசாக்குக்கும், யேக்கப்புக்கும் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள். நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பிக் கனனி யனையும், எமோரியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், எபூசியனையும் துரத்திவிடுவேன்."

யூதர்களுக்குக் கடவுள் வாக்களித்த கனன் நாட்டில் மேற்கூறப் பட்ட ஆறு இனக்குழுக்கள் வாழ்ந்து வந்த நிலையில் கடவுள் அவர்களைத் துரத்தி விடுகிறார். ஏற்கனவே இருந்த மக்களைத் துரத்திவிட்டுக் குடியேறிய நாட்டையே யூதர்கள் தங்களுக்குரிய புண்ணிய பூமியென்கின்றனர்.

பைபிளில் இருந்து மேலுமொரு வாக்கியத்தைப் பாருங்கள்:-

"ஆறு நாட்கள் உன் வேலையைச் செய்து ஏழாம் நாளிலே உன் மாடும், உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப் பெண்ணின் பிள்ளையும் அன்னியனும் இளைப்பாறவும் ஒய்ந்திருப்பாயாக."

யூதர்களுக்கு அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்றுத் தந்த கடவுள் யூதர்கள் அடிமைகள் வைத்திருப்பதை ஏற்றுக் கொள்கிறார் என்று மேற்கூறிய வாக்கியத்திலிருந்து அறியக் கூடியதாயுள்ளது. மேலும் கர்த்தர் மோசசை நோக்கி "இந்த வார்த்தைகளை நீ எழுது, இந்த வார்த்தைகளின் படியே உன்னோடும் இஸ்ரேலோடும் (அதாவது யேக்கப்போடு) உடன்படிக்கையைப் பண்ணினேன்" என்றார்.

"உன் முகத்திற்கு முன்னின்று ஏவியவனையும், கனனி யரையும், ஏத்தியனையும் துரத்திவிடக் குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன்."



படிப்பகம்

“தேசம் பாழாய்ப் போகாமலும், காட்டு மிருகங்கள் உனக்கு விரோதமாய்ப் பெருகாமலும் இருக்கும்படி நான் அவர்களை ஒரே வருசத்திற்குள்ளே உன் முன் நின்று துரத்திவிடாமல் நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும் வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உடன் நின்று துரத்திவிடு வேன். சிவந்த சமுத்திரம் (செங்கடல்) தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம் வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதி வரைக்கும் உன் எல்லையாய் இருக்கும்படி செய்வேன். நான் அந்தத தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக் கொடுப்பேன், நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய்.” நவீன இஸ்ரேல், கடவுளின் கட்டளைப்படியே மீதமாயிருந்த மக்களையும் துரத்திவிட்டது போலும்.

ஏபிரகாம் ஒரு யூதன் அல்ல. அவன் காலத்தில் யூதமதம் தோன்றவும் இல்லை. ஏபிரகாம் ‘உண்மையான’ கடவுளை வழிபட்டதாலேயே, கடவுள் அவன் முன் தோன்றி, கனன் நாட்டைத தருகிறேன் என்றபடியால் ஏபிரகாம் போகிறான் எனப்படுகிறது. ஏபிரகாம் ஈராக் நாட்டைச் சேர்ந்தவன். சுமார் பத்து வருடங்கள் கனன் நாட்டில் வாழ்ந்த பின் அவன் தனது 99வது வயதிலேயே சுண்ணத்துச் சடங்கு செய்கிறான். அவனுக்கும் எகிப்திய அடிமைப் பெண் ஹேகருக்கும் (Hagar) பிறந்த இஷாமெல் 13வது வயதிலேயே சுண்ணத்துச் சடங்கு செய்கிறான். ஏபிரகாமும் அவனது மகன் இஷாமெலும் ஒரே நாளில் சுண்ணத்துச் சடங்கு செய்ததாகக் கூறப்படுகிறது. “உங்கள் நுனித்தோலின் மாமிசத்தை விருத்த சேதனம் பண்ணக் கடவீர்கள். உங்களில் தலைமுறை தலைமுறைாகப் பிறக்கும் ஆண் பிள்ளைகளுக்கெல்லாம் எட்டாம் நாளில் விருத்த சேதனம் பண்ணப்படல் வேண்டும்.”

ஏபிரகாமின் மனைவியான சாராவின் (Sarah) அடிமைப் பெண் எகிப்திய நாட்டைச் சேர்ந்த ஹேகராவாள். ஹேகரை பைபிள் சில இடங்களில் பணிப் பெண் என்று கௌரவமாகக் குறிப்பிடுகிறது. சில இடங்களில் அடிமைப் பெண் என்று குறிப்பிடுகிறது. ஹேகர் கர்ப்பமான பின் எஜமானியை உதாசீனம் செய்கிறாள். கோபமடைந்த சாரா அவளைத் துன்புறுத்துகிறாள். அதனால் ஹேகர் வீட்டைவிட்டு வெளியேறு கிறாள். அப்போது தேவதூதன் ஹெகரிடம் தோன்றி அவளை மீண்டும் எஜமானியிடம்

செல்லுமாறு பணிக்கிறான். எஜமானி யின் துன்புறுத்தலைச் சகித்துக் கொள்ளுமாறும் கூறுகிறான். ஓரிடத்தில் அடிமைகள் சகிப்புத்தன்மையுடன் வாழ வேண்டு மெனப் போதிக்கும் கடவுள் யூதர்களை அடிமைத் தளையி லிருந்து விடுவித்தமைக்குப் பெருமை தேடிக் கொள்கிறார்.

இங்கு நாம் விளங்கிக் கொள்வது பத்துக் கட்டளைகளைக் கடவுள் மோசசுக்கு உபதேசத்ததாகக் கூறப்பட்ட காலப் பகுதியில் உலகின் பலவேறு பகுதிகளில் அடிமைச் சமுதாயம் நிலவியிருந்தது என்பதேயாகும். மோசசின் மனைவி ஓர் எதி யோப்பியப் பெண் என்பதையும் நாம் இங்கு அவதானிக்கலாம்.

மோசசின் சகோதரனான ஆரோன் எனப்பட்டவரே யூதர் களின் முதலாவது மதப் போதகராவார். அவரைத் தொடர்ந்தே யூத மதப் போதகர்கள் உருவாகினர். ஜெரூசலத்தில் ஒரு நடமாடும் கூடாரம் அல்லது வணக்கத் தலமே இஸ்ரேலியரின் வணக்கத்தலமும் பலி பீடமுமெனப் பைபிளில் "பெரும் இடப்பெயர்வு" (Exodus) எனப்படும் அத்தியாயம் கூறுகிறது.

வாக்குறுதியளிக்கப்பட்ட பூமியாகிய கனன் நாட்டை யடைந்து அதைக் கைப்பற்றிய யூதர்கள் கடவுளின் ஆணைப் படி செயற்பட்டார்கள் என யோசுவாவில் தெரிவிக்கப்படுகிறது. காலப்போக்கில் அங்கு மன்னராட்சி ஏற்படுத்தப்பட்டுக் கி.மு. 1077ல் யூதா இனக்குழுவில் (பைபிளில் சில இடங்களில் கோத்திரம் எனப்படுகிறது) வந்த டேவிட் அரசனானான். அவனது ஆட்சியின் போது மன்னராட்சி முறைமையும், மதபீடமும் ஜெரூசலத்தில் இறுக்கமாக ஸ்தாபிதமாயின. டேவிட் மன்னன் இறந்ததும் அவனது மகன் சொலமன் மன்ன னான். அவனே ஜெரூசலத்தில் இருந்த நடமாடும் கூடாரத்தை அகற்றி ஒரு பிரமாண்டமான கோவிலைக் கட்டினான்.

எவ்வாறாயினும் யூதர்கள் கனன் வாசிகளினதும், ஏனைய தேசத்தவரினதும் "போலியான மதங்களினால் தாக்கம் பெற்றிருந்தனர்" எனப் பைபிள் கூறுகிறது. இதன் மூலம் கடவு ளுடன் செய்து கொண்ட 'உடன்படிக்கையை' மீறிச் செயற் பட்டனர். அவர்களைத் திருத்துவதற்காகக் கடவுள் தொடர்ச்சி யாகப் பல இறைத் தூதுவர்களை அனுப்பினார் எனப் பைபிள் கூறுகிறது. ஹீப்ரு

மத நூலில், பதினெட்டுப் புத்தகங்கள் அத் தூதுவர்களின் பெயர்களைத் தாங்கியுள்ளன. அவர்களுள் ஈசையா, ஜெரிமையா, இசைக்கியல் என்பவர்கள் பிரதான மானவர்கள். சொரூப வழிபாட்டால் மக்கள் யெஹோவாவின் தண்டனைக்குள்ளாவார் என எச்சரிக்கப்பட்டனர்.

கி.மு. 607ல், அக் காலத்தைய உலக வல்லரசாயிருந்த, பபிலோனியர் ஜெரூசலத்தையும் அதன் கோவிலையும் நாட்டையும் கைப்பற்றினர். இதனால் யூதர்கள் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. கி.மு. 539ல், பாரசீகத்தைச் சேர்ந்த சைரஸ் பாபிலோனியரைத் தோற்கடித்து யூதர்களை மீண்டும் குடியேற அனுமதித்து ஜெரூசலத்தில் கோவிலை மீண்டும் கட்ட அனுமதித்தார். எவ்வாறாயினும் யூதர்கள் முதலில் பாபிலோனியரின் செல்வாக்கிற்குட்பட்டனர். பின்பு பாரசீகக் கலாச்சாரத்தின் செல்வாக்கிற்குட்பட்டனர். அதன் விளைவாக, யூதக் குடியிருப்புகள் மத்திய கிழக்கிலும் மத்தியதரைக் கடலைச் சூழ உள்ள பகுதியிலும் தோற்றம் பெற்றன. ஒவ்வொரு சமூகத்திலும் ஒரு புதுவகையான வழிபாட்டு முறை தோற்றம் பெற்றது. ஒவ்வொரு நகரத்து யூதர்களும் வழிபடும் மையங்களாக ஸினகோகுகள் (Synagogue) உருவாகின. அதன் பயனாகப் புனரமைக்கப்பட்ட ஜெரூசலத்தின் முக்கியத்துவம் குறைந்தது.

கி.மு. 332ல் கிரேக்கத் தளபதி, மாவீரன் அலெக்சாண்டர் மத்திய கிழக்கை அதிரடித் தாக்குதலில் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தான். அவன் ஜெரூசலம் வந்தபோது யூதர்களால் வரவேற்கப்பட்டான். அலெக்சாண்டரின் ஆட்சியின் கீழ் இருந்த தேசங்களிலெல்லாம் கிரேக்க மொழியும் கலாச்சாரமும் தத்துவமும் செல்வாக்குப் பெற்றன. இதனால் கிரேக்க, யூதக் கலாச்சாரங்கள் ஓர் இணைப்பைப் பெற்றன. வெளியிடங்களில் இருந்த யூதர்கள் ஹீப்ரூ மொழியைக் கைவிட்டு கிரேக்க மொழியைப் பேசத் தொடங்கினர்.

கி.மு. 3ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஹீப்ரூ வேத நூல் கிரேக்கத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது.



படிப்பகம்

padippakam

## இயல் - 3

# பைபிள் கூறும் வரலாறு

**பை**பிள் உண்மையில் போதிப்பதென்ன? (What Does the Bible Really Teach?) என்ற தலைப்புடனான பிரசுரத்தின் படி, பைபிள் எழுதி முடிப்பதற்கு ஆயிரத்து அறுநூறு (1600) வருடங்கள் சென்றன. அது கி.மு. 1513 லிருந்து கி.பி. 98 வரையிலான காலப் பகுதியெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 100ம் ஆண்டளவில் அதன் பழைய ஏற்பாடு எனும் பகுதி முழுமைப்படுத்தப்பட்டது.

குறித்த புத்தகத்தை வெளியிட்டவர்கள் ஒரு அமெரிக்க நிறுவனத்தினர். அது 2006ம் ஆண்டு யப்பானில் பதிப்பிடப் பட்டது. இன்றைய வடிவில் நாம் காணும் பைபிளை கி.பி. 170க்கும் 220க்குமிடையிலே உத்தியோக பூர்வமாக புனித வேத ஆகம நூலாகத் திருச்சபை ஏற்றுக் கொண்டது.

பைபிள் என்றால் புத்தகம் என்று பொருள். பழைய ஏற்பாடு எனப்படுவது ஹீப்ரு மொழியில் எழுதப்பட்டது. இதை யூத பைபிள் என்கின்றனர். இதில் 39 புத்தகங்கள் உள்ளன.

கி.பி. 367ம் ஆண்டிலேயே முதன் முறையாக புதிய ஏற்பாட் டின் 27 புத்தகங்களும் நிரற்படுத்தப்பட்டன. பைபிள் நாற்பதுக்கு மேற்பட்டவர்களால் எழுதப்பட்டது என்ற போதும், கடவுளின் அருளால் அவர்கள் எழுதத் தூண்டப்பட்டனர் என்றே கூறப் படுகிறது.

யூதர்கள் தம்மை ஏபிரகாமின் குழந்தைகள் என்கின்றனர். அப்படியானால் அந்த ஏபிரகாம் யார்? அவனின் முன்னைய பெயர் ஏபிரம் என்றும் கடவுள் அவனது பெயரை ஏபிரகாம் என மாற்றினார் என்றும் கூறப்படுகிறது.



படிப்பகம்

கி.மு. 1800ம் ஆண்டு மெசப்பத்தேமியாவிலிருந்து (அதாவது இன்றைய இராக்கிலிருந்து)- கடவுள் வாக்களித்த பூமியான கனன் நாட்டிற்கு ஏபிரம் செல்கிறான். வாக்களித்த இப் பூமி தான் பிற்காலத்தில் பலஸ்தீனமானது. அதன் பின்பு இஸ்ரேல் ஆனது. இந்த ஏபிரம் உண்மையான கடவுளை வணங்கிய தாலேயே கடவுள் அவனிடத்தில் தோன்றி "உனது சந்ததியின ருக்கு கனன் நாட்டைத் தருகிறேன்" என வாக்குறுதி யளித்தார் என பைபிள் கூறுகிறது.

கடவுள் ஏபிரமுக்கு பின்வருமாறு கூறியதாகப் பைபிள் கூறுகிறது: "உனது நாட்டை, உனது சுற்றத்தாரை, உனது தந்தையின் வீட்டை விட்டு நீங்கிக் கனன் நாட்டிற்கு நீ போ. அந்த நாட்டை மாபெரும் நாடாக்குவேன். நான் உன்னை ஆசீர்வதிப்பேன். உனது பெயரைப் பிரசித்தம் பெறச் செய்வேன். உனது பெயர் ஆசீர்வாதங்களின் போது கூறப்படும் அளவுக்கு பிரசித்தமாகும்."


ஹரான் என்ற இடத்திலிருந்து வெளியேறும் போது ஏபிர முக்கு (அப்போது அவன் பெயர் அதுவே) 75 வயது. தன்னுடன் மனைவி சராய், சகோதரனின் மகன் லோத் ஆகியோருடன் தனது சொத்துக்களுடன் சகல ஊழியர்களையும் (அடிமைகள்) கூட்டிக் கொண்டு கனன் நாட்டிற்குப் பயணமானான்.

அச் சமயம் கனன் நாட்டில் பல்வேறு மக்கள் வசித்து வந்தனர். கடவுள் ஏபிரமுக்கு முன் தோன்றி "நான் இந்த நாட்டை உனது சந்ததியினருக்குத் தருகிறேன்" என்றார். ஏபிரம் தன்முன் தோன்றிய கடவுளுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.



கனன் நாட்டில் பஞ்சம் ஒன்று ஏற்படவே, ஏபிரம் சில காலம் தங்கியிருக்க வென எகிப்து செல்கிறான். மனைவி சரா அழகானவள் என்பதால் வழியில் யாராவது கேட்டால் அவளைத் தனது சகோதரி என்று கூறும் படி சராயிடம் ஏபிரம் கூறியிருந்தான். மனைவி என்று கூறினால் தன்னைக் கொன்று விட்டு அவளைக் கூட்டிக் கொண்டு போய்விடுவார்கள் என்று பயத்தினால் அவ்வாறு பொய் சொல்லும்படி கூறியிருந்தான்.

அவர்களை வழியிற் கண்ட அரச சேவகர்கள் அவளின் அழகு பற்றி அரசனுக்கு எடுத்துக் கூறினர். அவளை அரண்மனைக்கு அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட, அவளை அரண் மனைக்குக் கொண்டு சென்றனர். அரசன் ஏபிரமுக்கு ஆடுகள்,

padippakam





மா மேதைகளான ஐயன்ஸ்ரீனும் கார்ல் மாக்ஸ்சும் யூத வம்சாவழியில் வந்தவர்களே. இவர்கள் இறுதிவரை சோசலிஷத்தின் மீது அசையாத நம்பிக்கை வைத்து மனிதகுலத்திற்கு தத்தமது பங்களிப்பை வழங்கியவர்களாவர்.

ஜெருசலத்தில் உள்ள பாறைமேல் குவிந்த கோபுரம் ஊடாக முகமது நபி மோட்சம் சென்றதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

படிப்பகம்

padippakam



கொர்டோபாவிலுள்ள மெஸ்குவிற்றா ஒரு காலத்தில் உலகிலேயே பிரமாண்டமான மசூதியாய் விளங்கியது. இன்று அதன் மத்தியில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் இடம் பிடித்துள்ளது.



இற்றைக்கு 4000 வருடங்களுக்கு முன்பே ஜெகோவா கடவுளை யூதர்களின் மூதாதையரான ஏபிரம் (ஏபிரகாம்) வழிபட்டதாகக் கூறப்படுகிறது.

படிப்பகம்

padippakam

மாடுகள், கழுதைகள், ஆண்-பெண் அடிமைகள், ஒட்டகங்கள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கினான். சிறிது காலம் சென்றது. மாற்றான் மனைவியைக் கவர்ந்ததால் அரசன் பல கஷ்டங்களை எதிர்நோக்கினான். இதனால் அவன் சராவை மீண்டும் ஏபிரமிடம் ஒப்படைக்கிறான். ஏபிரமுக்குக் கொடுத்த பரிசில்களை அவனையே வைத்திருக்குமாறும் அரசன் கூறினான். இப்போது ஏபிரம் பெரிய செல்வந்தன். மீண்டும் கனன் நாட்டிற்குச் செல்கிறான்.

கடவுள் மீண்டும் ஏபிரமுக்குத் தோன்றினார்:
"கண்ணைத் திறந்து மிகத் தொலை தூரத்தைப் பார் - வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு - நீ காணும் அத்தனை இடத்தையும் உனக்கும் உனது சந்ததியினருக்கும் என்றுமே உரித்தாகத் தருகிறேன். பூமியில் உள்ள மணலை எப்படி எண்ண முடி யாதோ, அதே போல் எண்ண முடியாத எண்ணிக்கையில் உனது சந்ததியினர் இருப்பார்கள்."

அதன் பின் ஏபிரம் தனது கூடாரத்தைக் கற்பூர மரங்கள் உள்ள இடமான ஹெபுரேனுக்கு மாற்றினான். அங்கே அவன் கடவுளுக்கு ஒரு பலிபீடத்தை ஏற்படுத்தினான்.

கடவுள் ஏபிரமுக்கு பின்வருமாறு கூறுகிறார்:
"உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத் தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக் கடவாய்."

"இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந் தீர்ப்பேன், பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள். நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்."

பைபிளில் கூறப்பட்ட சில நிகழ்வுகளைத் தீர்க்கதரிசனம் என்கின்றனர். பைபிள் எழுதி முடிப்பதற்கு 1600 வருடங்கள் எடுத்தன என்றதால், இக் காலப்பகுதியில் ஏற்கனவே இடம்பெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டு, பைபிளில் கூறப் பட்டவை கடவுளினால் கூறப்பட்டதால், முன்கூட்டியே என்ன என்ன நடக்கப் போகின்றது எனக் கூற முடிந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. யூதர்கள் 400 வருடங்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து மீண்டும் கனன் நாட்டிற்கு பொருள்களோடு வருவார்கள் என்ற கூற்றும் அவ்வகைப்பட்டதே.



படிப்பகம்

ஏபிரமின் மனைவி சராய்க்குப் பிள்ளைப் பேறில்லாததால் தனது எகிப்திய அடிமைப் பெண் ஹெகரை கணவனிடத்தில் ஒப்படைக்கிறாள். ஹெகர் கருத்தரித்த பின் "தன் நாச்சியாரை" அற்பமாக எண்ணினாள்.

சராய் ஏபிரமை நோக்கி:- "என் அடிமைப் பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன். அவள் தான் கர்ப்பவதி யானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள். கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந் தீர்ப்பாராக" என்றாள். அதற்கு ஏபிரம் சராயை நோக்கி, "இதோ உன் அடிமைப் பெண் உன் கைக்குள் இருக்கிறாள். உன் பார்வைக்கு நல்லமான படி அவளுக்குச் செய்" என்றான். முன் குறிப்பிட்டது போல, சராய் அவளைக் கடினமாக நடத்தினபடியால் அவள் ஓடிப் போனாள்.

வழியில் ஹெகர் முன் தோன்றிய தேவதுாதன், "நீ உன் நாச்சியாரிடம் திரும்பிப் போய், அவள் கையின் கீழ் அடங்கி யிரு" எனவும் "உனது சந்ததியை மிகவும் பெருகப் பண்ணுவேன். அது பெருகி எண்ண முடியாததாயிருக்கும். நீ கர்ப்பவதியாய் இருக்கிறாய். ஒரு குமாரனைப் பெறுவாய் அவனுக்கு இஸ்மயேல் என்று பெயரிடுவாயாக" எனவும் பணித்தார்.

ஹெகர் ஏபிரமுக்கு இஸ்மயேலைப் பெற்ற போது ஏபிரம் 86 வயதாயிருந்தான். ஏபிரமுக்கு 99 வயதாய் இருந்தபோது கர்த்தர் அவனிடத்தில் தோன்றி:

"நான் எல்லாம் வல்ல இறைவன். உன் மூலம் ஒரு தேசத்தை உருவாக்குவேன். உன் மூலம் அரசர்கள் உருவாகுவார்கள். இப்போது நீயும் உனது சந்ததியினரும் அந்நிய நாட்டவர். உங்களுக்கு முழுக் கனன் நாட்டையும் தருகிறேன். பிறக்கும் ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் எட்டாம் நாள் சுண்ணத்துச் சடங்கு செய்தல் வேண்டும்."

"உனது மனைவி சராய் இன்று முதல் சரா என்றும் நீ ஏபிரகாம் என்றும் அழைக்கப்படுவதாக. சராவுக்கு ஓர் ஆண் குழந்தை பெற ஆசீர்வதிக்கிறேன். அவனுக்கு ஐசாக் என்று பெயரிடு."

ஐசாக் பிறந்தபோது ஏபிரகாமுக்கு 100 வயது. சராவுக்கு 90 வயது.

ஏபிரகாம் 99 வயதாய் இருந்தபோதுதான் அவனுக்குச்



படிப்பகம்

சுண்ணத்துச் சடங்கு நடந்தது. இஸ்மயேல் 13 வயதாய் இருந்தபோது தான் அவனுக்குச் சுண்ணத்துச் சடங்கு செய்யப் பட்டது. இருவரும் ஒரே நாளில் சுண்ணத்துச் சடங்கு செய்து கொண்டனர்.

சரா தனது 127வது வயதில் கனன் நாட்டில் இறந்தாள். ஏபிரகாம் அவளின் உடலைப் புதைப்பதற்கு கனன் நாட்ட வரிடம் ஓர் இடம் தருமாறு வேண்டுகிறான். அதற்காக 400 ஷெக்கல்கள் காசு கொடுக்கப்பட்டு ஒரு துண்டுக் காணி, ஒரு குகை என்பவற்றைச் சட்டரீதியான உடமையாகப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஐசாக்கின் மகன் யேக்கப், றேச்செல், லீ என்ற சகோதரிகளை மணம் செய்திருந்தான். இரண்டு பேரும் பிள்ளைப் பாக்கியம் இல்லாததால் தத்தம் அடிமைப் பெண்களான பில்ஹா (Bilhah), ஸில்பா (Zilpah) என்போர் மூலம் யேக்கப் குழந்தையைப் பெற வேண்டுமென்றனர். அவர்களுக்குப் பன்னிரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

இந்தப் பன்னிரண்டு பிள்ளைகளே இஸ்ரேல் (கனன்) நாட்டில் பிற்காலத்தில் பன்னிரண்டு இனக் குழுக்களைத் தோற்றுவித்தனர். ஓர் இனக் குழுவின் பெயர் யூதா என்பதாகும். அதிலிருந்தே யூதர்கள் என்ற பதம் வந்தது.

கனன் நாட்டில் பஞ்சம் ஏற்படவே யேக்கப்பின் பன்னிரண்டு பிள்ளைகளும் எகிப்தில் தஞ்சம் புகுகின்றனர். யேக்கப் பிற்காலத்தில் இஸ்ரேல் என அழைக்கப்பட்டான். அதுவே நாட்டின் பெயருமானது. எகிப்து சென்ற யேக்கப்பின் பிள்ளைகள் அங்கு அடிமைகளாயினர் எனப்படுகிறது.

கிட்டத்தட்ட கி.மு. 1250ம் ஆண்டளவில் மோசஸ் தலைமை யில் யேக்கப்பின் வழித் தோன்றல்கள் -ஹீப்ரூவினர் எனப் பட்டவர்கள்- எகிப்திலிருந்து வெளியேறுகின்றனர். இதையே பைபிள் பெரும் இடப்பெயர்வு அல்லது சனத்திரளின் வெளியேற்றம் (Exodus) எனக் குறிப்பிடுகிறது.

கடவுள் பாலும் தேனும் ஓடுகிற நாடு எனத் தெரிவித்த கனன் நாட்டில் ஆகக் குறைந்த இரண்டு தடவைகள் பஞ்சம் ஏற்பட்டதாகப் பைபிள் தெரிவிக்கிறது.

padippakam

முதலாவது பஞ்சத்தின் போது ஏபிரகாம் எகிப்தில் சிறிது காலம் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இரண்டாவது பஞ்சத்தின் போது யேக்கப்பின் (பிற்காலத்தில் இஸ்ரேல் எனப்பட்ட) பன்னிரண்டு பிள்ளைகளும் பரிவாரங் களும் எகிப்து நோக்கி உணவு தேடிச் செல்கின்றனர். அக் காலத்தில் எகிப்து தானியத்தை ஏராளமாகக் கொண்டிருந்தது. அச் சமயம் அங்கு அடிமைச் சமூகம் இருந்ததென்பதையும் ஊகிக்கலாம். பஞ்சத்திலிருந்து விடுபட எகிப்து சென்றவர்கள் அங்கிருந்த அடிமைகளோடு சேர்ந்து அடிமைகளானார்கள் என்ற முடிவுக்கு வரலாம்.

அடிமைத் தளையிலிருந்து விடுபடவே இஸ்ரேலியர் எகிப்தைவிட்டுப் பெருந்திரளாய் வெளியேறினர் என்றால் அடிமைத்தனம் இல்லாத சமூகத்தையல்லவா அவர்கள் கனன் நாட்டில் கட்டியெழுப்பி இருத்தல் வேண்டும்.

உலக சரித்திரத்தை அவதானித்தால் ஆரம்ப கால கட்டங்களில் உணவு உற்பத்தி மட்டுப்பட்டிருந்த போது சண்டையின் போது பிடிபடும் கைதிகளைக் கொன்றனர். உயிருடன் வைத்திருந்தால் அவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு கொன்றனர். ஆனால் உற்பத்தி பெருகிய போதுதான் சண்டையில் சிறைபிடிக்கப்பட்டவர்களை அடிமைகளாக்கி வேலை வாங்கினர். அடிமைகள் அவ்வப்போது கிளர்ச்சி செய்தனர். கொடுமை தாங்காமல் ஓர் இடத்தை விட்டு வேறு ஓர் இடத்திற்கு தப்பி ஓடினர்.

பிற்காலத்தில் மிகப் பிரசித்தமான அடிமைக் கிளர்ச்சியே ஸ்பாட்டாக்கஸ் தலைமையில் இடம்பெற்ற கிளர்ச்சியாகும்.

அது அவ்வாறிருக்க, கனன் நாட்டிற்குப் போகும் வழியில் சினாய் மலையில் அவர்கள் தங்கியி ருந்தனர். இஸ்ரேலுடன் கடவுள் (யெஹோவா) ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்திற்கு மோசஸ் அனுசரணையாளராகவிருந்தார் எனப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தை மோசஸ் கல்லிலே செதுக்கி மிருகங்களின் இரத்தத்தைக் காணிக்கையாகச் செலுத்திப் பத்திரப்படுத்தினான்.

மோசஸ் ஒரு சமயம் எகிப்திய இளவரசனாக இருந்ததாகவும்



படிப்பகம்

padippakam

கூறப்படுகிறது. மோசஸ் வாக்குறுதியளிக்கப்பட்ட நாடான கனனைச் சென்றடையவில்லை. இஸ்ரேலின் சந்ததியினரே கனன் நாட்டிற்கு சென்று குடியமர்ந்தனர்.

கனன் நாட்டிற்கு போகும் வழியில் யேக்கப் ஓர் அந்நியனால் தாக்கப்பட்டதா கவும் சண்டையின் பின் அந்த அந்நியன் தோல்வியை ஒப்புக் கொண்டு சென்றதாகவும் அவனே யேக்கப்புக்கு இஸ்ரேல் என்று பெயர் வழங்க வேண்டுமென்று ஆசீர்வதித்தான் எனவும் கூறப்படுகிறது.

கனன் நாட்டில் ஏற்கனவே கனன் வாசிகளும் ஏனையவர்களும் வாழ்ந்து வந்தனர். கனன் நாட்டை அதன் மக்களிடமிருந்து கைப்பற்றியே யூதர்கள் குடியேறினர் என்பது கவனிக்கப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam

## இயல் - 4

# யூதர்களை முதன்முதலில் துரத்தியவர்கள் கிறீஸ்தவர்களே

சமகால யூதர்களின் கதையை பாஸில் மகாநாட்டிலிருந்து ஆரம்பிக்கும் வழமை பெரும்பாலான எழுத்தாளர்களிடம் இருந்து வருகிறது. யூதர்களைத் துன்புறுத்தி நாட்டை விட்டுத் துரத்தியது தொடர்பாக எழுதும் போது, ஹிட்லரின் அட்டூழியத்திலிருந்து ஆரம்பிப்பவர்கள் பலர் உள்ளனர். ஹிட்லருக்கு முன்பே கத்தோலிக்கரும், புரட்ஸ்தாந்துக் கிறீஸ்தவர்களும் யூதர்களைத் (யூத மதத்தவரை) தத்தம் நாட்டிலிருந்து துரத்தியிருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

"இயேசு கிறீஸ்துவைக் காட்டிக் கொடுத்த யூதர்களைக் கொல்வதில் தவறில்லை" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டே ஹிட்லர் யூதர்களை அழிப்பதற்கான காரணம் முன்வைக்கப்பட்டது.

கடவுளின் கட்டளைப்படி கனன் நாட்டைக் கைப்பற்றிய யூதர்கள் கி.மு. 1077ல் ஒரு மன்னராட்சியை ஏற்படுத்தினர். யூதா இனக் குழுவிலிருந்து வந்த சாவுலும் அவனைத் தொடர்ந்து டேவிடும் அரசர்களானார்கள். டேவிடின் ஆட்சியின் கீழ் ஜெரூசலத்தை மையமாகக் கொண்ட ஒரு அரச பரம்பரையும், மதபீடமும் ஸ்திரமாக உருவாக்கப்பட்டன.

டேவிட் மன்னன் இறந்த பின் அவனுடைய மகன் சொலமன் அரசனானான். அவன் ஜெரூசலத்தில் உன்னதமான ஒரு கோவிலைக் கட்டினான். எவ்வாறாயினும் யூதர்கள் கனன் வாசிகளினதும் ஏனைய அயல் நாட்டவரினதும் "பொய்யான மதங்களின் தாக்கத்திற்குள்ளாகியிருந்தனர்" என்று கூறப்படுகிறது.



படிப்பகம்

இஸ்ரேலில் முடியாட்சி நிலவிய போது அங்கு பன்னிரண்டு இனக்குழுவினர இருந்துள்ளனர் .அவர்கள், அவரவர்களுக்குரிய வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்துள்ளனர் என அறியப்படுகிறது.

கி.மு. 922ல் சொலமன் அரசனின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பிளவுகளால் யூதா முடியாட்சி என்ற போட்டி ஆட்சி உருவானது. அதன் தலைநகரமாய் ஜெரூசலம் விளங்கியது. வட பகுதி இஸ்ரேல் என்ற பெயருடன் இயங்கியது.

யூத முடியாட்சி 212 ஆண்டுகளுக்கு ஒன்பது வெவ்வேறு வம்சத்தினரால் 19 மன்னர்கள் மூலம் நடத்தப்பட்டு வந்தது என ஒரு நூலில் காணப்படுகிறது.

பின்னர் பபிலோனிய முற்றுகையால் வெளியேறி பாரசீக மன்னனால் மீளக் குடியேற்றப்பட்ட யூதர்கள் கிரேக்கர்களது செல்வாக்கிற்குட்பட்ட காலத்தினை அடுத்து ரோமாபுரிப் பேரசுக்குக் கீழ்ப்பட்டனர். ரோமாபுரி கிறிஸ்துவத்தை ஏற்ற நிலையில் கி.பி . 135 ல் ரோமானியர் ஜெரூசலத்தை அழித்து யூதர்களை வெளியேற்றினர். யூதர்கள் உலகின் நாலா மூலைக்கும் சென்று குடியேறினர்.

கி.பி 500க்கும் 1500க்குமிடைப்பட்ட காலத்தில் இரண்டு வெவ்வேறு யூத சமூகங்கள் தோன்றின. கி.பி. 638லிருந்து 1072 வரையான காலப் பகுதியில் பலஸ்தீனம் அரபியரின் ஆட்சியின் கீழ் இருந்தது.

கி.பி. 1095ல் போப்பாண்டவர் உர்பன் (Urban) ஜெரூசலத்தில் உள்ள யேசுவின் நினைவாலயத்தை இஸ்லாமியரின் பிடியிலிருந்து மீட்பது என விடுத்த அறைகூவலைத் தொடர்ந்து கி.பி. 1099 யூலை 15ம் திகதி ஜெரூசலம் கைப்பற்றப்பட்டதும், பிற்காலத்தில் ஐரோப்பா முழுவதையும் கைப்பற்றி மதமாற்றம் மேற்கொள்ளப்பட்டதும் சாத்வீகமான முறையில் நடக்கவில்லையென்பதை நாம் அவதானிக்கலாம். அச் சமயம் ஜெரூசலத்தில் முழுமையான நிலப்பிரபுத்துவ ஆட்சி நிலவியிருந்தது. கிறீஸ்தவர்களின் ஆட்சி கி.பி. 1099 லிருந்து

padippakam

கி.பி. 1291 வரை இடம்பெற்றது.

12ம் நூற்றாண்டில் பல்வேறு நாடுகளிலிருந்தும் யூதர்கள் வெளியேற்றப்பட்ட னர். இவை யாவும் மத அடிப்படையிலேயே இடம் பெற்றன, இன அடிப்படையில் அல்ல.

'எனது மக்கள்- யூதர்களின் கதை' என்ற நூலை எழுதிய முன்னாள் இஸ்ரேலிய அமைச்சராயிருந்த (Abba Eban) அபா இபான் பின்வருமாறு கூறுகிறார்:
"கத்தோலிக்க திருச்சபையின் பிரத்தியேகக் கட்டுப்பாட்டின் கீழ்வந்த எந்த நாட்டிற்கும், யூதர்களைப் பொறுத்த மட்டில், ஒரே கதி தான் நேர்ந்தது. மோசமான சீரழிவு, சித்திரவதை, கொலை, வெளியேற்றம் என்பது தான் அது."

சிலுவை யுத்தத்தின் முடிவில், கி.பி. 1492ல் ஸ்பெயினில் மீண்டும் கத்தோலிக்க மதத்தினர் ஆட்சி பீடமேறினர். அவர்கள் தமது பிராந்தியத்தில் இருந்த சகல யூதர்களையும் வெளியேற்றினர். வெளியேறியவர்கள் கிழக்கு ஐரோப்பாவிற்கும் மத்திய தரை நாடுகட்கும் ஓடினர்.

கி.பி. 1517லிருந்து 1917வரையான நானூறு வருடப் பகுதியில் துருக்கிய ஒத்துமான் பேரரசின் கீழ் பலஸ்தீனம் இருந்து வந்துள்ளது. பிரித்தானியரால் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பின் படி, 1918ம் ஆண்டு பலஸ்தீனத்தில் இருந்த யூதர்களின் எண்ணிக்கை 56,000 மட்டுமே. அதேசமயம் பலஸ்தீனியர் ஏழு இலட்சம் பேரளவில் அங்கு வாழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1921ல் பிரித்தானியா பலஸ்தீனத்தின் ஐந்தில் நான்கு பகுதியைப் பிரித்து ட்ரான்ஸ் ஜோர்டானை உருவாக்கியது.

யூதர்களின் பூர்வீகம் (The Antiques of the Jews) என்ற பிரசித்தி பெற்ற நூலைப் படைவீரரும் வரலாற்றாசிரியருமான பிளேவியஸ் யோசேப்பஸ், ரோமாபுரி சக்கரவர்த்தியின் அனுசரணையுடன் வாழ்ந்த காலத்தில், தனது சுயசரிதையையும் மேற்படி நூலையும் எழுதியிருந்தார். அவரின் தகவலின்படி கி.பி. முதலாம் நூற்றாண்டில் யூதர்கள் நான்கு பிரிவினராக அல்லது நான்கு தத்துவங்களை உடையவர்களாயிருந்தனர்.


யூதர்கள் யேசுவை ஓர் இறைதூதராக ஏற்றுக் கொண்ட




படிப்பகம்



இஸ்ரேலியர்கள் பலஸ்தீன மேற்குக் கரையில் கட்டி எழுப்பியுள்ள நீண்ட தடைச் சுவர்



இஸ்ரேலிய தடைச்சுவரை எதிர்த்து பலஸ்தீன மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள்




**1967ல் ஆறுநாள் யுத்தத்தைத் தொடர்ந்து இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மேற்கு கரையையும் காசா நிலப்பரப்புத் துண்டையும் கைப் பற்றியதோடு எகிப்தின் சினாய் குடாப் பகுதியையும், சிரியாவின் கோலான் மலைக் குன்றையும் கைப்பற்றியது.**

padippakam

தில்லை. இதிற் கவனிக்கத்தக்கது என்னவென்றால் யேசுவின் தாய் தந்தையரான மேரியும், யோசேப்பும் யூதர்களே.

யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியருக்கும் ஜெரூசலம் ஒரு வணக்கத்துக்குரிய இடமாகும்.

இந்தக் கோவில் மலை எனப்படும் இடம் நாற்பது ஏக்கர் பரப்புடையது. இதில் மோறியா எனப்படும் மலைப் பகுதியில் யூதர்கள் கி.மு. 950ல் ஒரு யூதக் கோவிலைக் கட்டியிருந்தனர். கிறிஸ்த்துவுக்கு முன்-பின் என்ற சொற்பிரயோகத்தை யூதர்கள் பயன்படுத்துவதில்லை. கடவுள் பூமியைப் படைத்ததாகக் கூறப்படும் காலத்திலிருந்தே அவர்களது கலண்டர் அமைந்திருக்கிறது.

கி.பி. 619ல் முஸ்லிம்கள் மலை உச்சியில் மேற்குப்புறமாய் ஒரு மசூதியைக் கட்டினர். இருபது வருடங்களின் பின் அல் அக்ஷா என்ற இரண்டாவது மசூதியையும் அங்கு கட்டினர். கோவில் மலையெனப்படும் இடத்தை ஹராம் ஆஷ்-எல் ஷரீவ் என இஸ்லாமியர் அழைக்கின்றனர். அராபிய மொழியில் மேன்மைக்குரிய மூலஸ்தானம் என்பதே அதன் பொருள். அவ்விடத்திலிருந்து தான். முகம்மது நபியவர்கள் கி.பி. 632 ம் ஆண்டு மோட்சம் சென்றதாகக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

யூத, முஸ்லிம் ஆண்டு 12 சந்திர மாதங்களைக் கொண்டது. எனவே அதில் ஏறத்தாழ 355 நாட்களே உள்ளன. இந்த நடைமுறை இன்னமும் தொடருகிறது. எகிப்தியரே முதன்முதலில் வருடமொன்றிற்கு பன்னிரண்டு மாதங்கள் எனவும் மாதமொன்றிற்கு முப்பது நாட்கள் எனவும் கணிப்பிட்டிருந்தனர் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம்.



படிப்பகம்

padippakam

*இயல் - 5*

# இஸ்ரேலின் உருவாக்கமும் பிரித்தானியாவின் சூழ்ச்சியும்

ஒத்தோமான் பேரரசின் இறுதிக் காலத்தில், பலஸ்தீனம் சிரியாவுடன் இணைந்த ஒரு நிர்வாகப் பிரதேசமாய் விளங்கியது. ஒத்தோமான் பேரரசு பலஸ்தீனத்தில் குடியேற்றம் எதையும் மேற்கொள்ளவில்லை. ஜெரூசலத்தின் மீதே அவர்கள் கவனம் இருந்தது. பாலஸ்தீனம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. சிறிய உட்கட்டமைப்பு வசதிகளே செய்யப்பட்டன. கிராமப்புறத்தில் நிலப் பிரபுத்துவ அமைப்பு நீண்டகாலமாக நிலவியது. விவசாய நிலங்களில் ஏகப் பெரும்பாலானவை பெரிய அளவிலான நிலச் சொந்தக்காரர் வசம் இருந்தது. மக்கள் அவர்களிடம் கூலிக்கு வேலை செய்தனர்.

ஜெரூசலத்தில் ஒத்தோமான் ஆட்சியாளரின் நிர்வாக ஊழியர் செயற்பட்டனர். கிராமங்களில் பெரிய தோட்டங்களில் மாளிகை களை வைத்திருந்த செல்வந்த நிலச் சொந்தக்காரர், நகரங்களிலும் தமக்கான வீடுகளை அமைத்திருந்தனர். பலஸ்தீனம் வெற்று நிலமாய் இருக்கவில்லை. சிறியதொரு யூத சமூகம் பாலஸ்தீனத்தில் இருந்தது.

யூதர்கள் அராபிய அயலவருடன் சமாதானமாக வாழ்ந்து வந்தனர். ஜெரூ சலத்தின் தென்பகுதி ஒத்தோமான் ஆட்சியாளரால் கொன்ஸ்ரான்ரினோப்பிளிலிருந்து (இப்போதைய இஸ்தான்புல்) நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஏனைய இரு மாவட்டங்களான நல்லூரஸ், அக்கா ஆகியன பெய்ரூத்தின் பகுதியாய் இருந்தன. ஜோர்தான் சிரியாவின் மாகாணமாய் இருந்தது. அதன் தலைநகரம் டமாஸ்கஸ். அச் சமயம் மூன்று மாவட்டங்களினதும் மொத்தச் சனத் தொகை ஆறு இலட்சம். இதிற் பத்துச் சதவீதமானவர்கள் கிறிஸ்தவர்கள். யூதர்கள் நான்கு சதவீதமானோர் மட்டுமே. பெரும்பாலான முஸ்லிம்கள் சுன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

நவீன இஸ்ரேலைப் பற்றிப் பேசுவதென்றால் சுவிற்சலாந்தின்



படிப்பகம்

padippakam

பாஸில் (Basle) நகரில் 1897ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி இடம்பெற்ற முதலாவது உலக சியோனிச மகாநாட்டிலிருந்து ஆரம் பிக்கலாம். கிறிஸ்துவுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஜெரூசலம் சியோன் மலையில் அமைந்திருந்தது. புராதன ஜெரூச லத்திற்குப் போக வேண்டும் எனக் கூறியவர்களை சியோனிஸ்ட் டுகள் என்பர்.

பாஸில் மாநாட்டில் நான்கு அம்ச வேலைத் திட்டம் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த மகாநாட்டிலேயே யூத மக்களுக்கு சட்டபூர்வமான வதிவிடம் ஒன்று பலஸ்தீனத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. 'அரசு' என்ற பதம் அப்போது பயன்படுத்தப்படவில்லை. அதனாலேயே வதிவிடம் (Home) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

இந்த மாநாட்டை ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட்டில் 1860ல் பிறந்த 37 வயதுடைய ஹெர்சல் (Herzl) கூட்டியிருந்தார். 1896ல் ஹெர்சல் 'யூத அரசு' என்ற துண்டுப் பிரசுரத்தை பாஸில் மகாநாட்டிற்கு முன்பதாக வெளியிட்டிருந்தார். அந்தத் துண்டுப் பிரசுரத்தில் பழைய கருத்தியல் ஒன்றையே தான் விருத்தி செய்ததாகவும் கூறியிருந்தார். பழைய கருத்தியல் என அவர் குறிப்பிட்டது யூத அரசை மீள உருவாக்குதல் என்று பொருள்படும்.

ஹெர்சலுக்கு முந்திய தலைவர்கள் யூத மக்களின் பிரச்சினையை ஆராய்ந்தனர் என்றால் ஹெர்சல் அப் பிரச்சினைக்கான தீர்வை முன் வைத்தாரென அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மாநாட்டிற்கு முன்பாகவே ஹெர்சல் பலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றுவதற்குத் தேவையான நிதியைப் பெறப் பல செல்வந்த யூதர்களை நாடியிருந்தார். அது குறிப்பிடத்தக்க வெற்றி பெறவில்லை.

1901ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி ஹெர்சல் கொன்ஸ்ரான்ரி னொப்பிளில் ஒத்தோமன் பேரரசின் சுல்தானைச் சந்தித்தார். ஒத்தொமான் சாம்ராஜ்யத்தின் பாரிய கடனைத் தீர்ப்பதற்கு நிதி உதவி அளித்தால் அதற்கு ஈடாகப் பலஸ்தீனத்தில் யூதக் குடியேற்றத்திற்கு ஒரு பட்டயக் கம்பனியை (Chartered Company) ஏற்படுத்த முடிக்குரிய அங்கீகாரம் கிடைக்குமா எனக் கேட்டார்.

அவ்வாறு பலஸ்தீனத்திற்குச் செல்பவர்கள் துருக்கியக் குடி மக்களாக வேண்டும் என்றும் வருபவர்கள் வெவ்வேறு இடங்களில் பரவலாகக் குடியமர்த்தப்படுவதை அவர்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அதற்கு இணங்குவதாக சுல்தான் (இரண்டாம் அப்துல்



படிப்பகம்

ஹமீட்) கூறினார். இந்த யோசனையை ஹெர்சல் ஏற்கவில்லை.

சுல்தானுடன் கதைத்துக் காரியத்தைச் செய்ய முடியாதென்பதை உணர்ந்த ஹெர்சல் பிரித்தானிய அரசின் தலைவர்களுடன் கதைத்துத் தனது எண்ணத்தை நிறைவேற்ற முற்பட்டார்.

சுல்தானைச் சந்தித்த ஹெர்சல் சுல்தானைப் பின்வருமாறு வர்ணித்தி ருந்தார்:

"தளர்வடைந்த கரங்கள். தாடிக்கு அழகாக மை பூசப்பட்டிருக்க வில்லை. நீண்ட பழுப்படைந்த பற்கள். வலது புறத்தில் பற்களுக் கிடையே பெரிய இடைவெளிகள்."

ஹெர்சலைச் சந்தித்த போது திட்டமிட்ட பாரிய யூதக் குடியேற் றத்திற்கு சுல்தான் இணங்காவிட்டாலும், பிற்காலத்தில், துருக்கிய ஆட்சியாளர் சிறிது சிறிதாகக் காணிகளை வழங்கி யூதக் குடியேற்றத் துக்கு உதவி செய்தனர் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். யூதக் குடியேற்றத்திற்குத் துருக்கிய ஆட்சியாளர், ஏதோ வகையில், தெரிந் தோ தெரியாமலோ, படிப்படியாக உதவி வழங்கி வந்தனர்.

1910ம் ஆண்டில் துருக்கியிடமிருந்து வாங்கப்பட்ட நிலத்தில் ரெல் அவீவ் நிறுவப்பட்டது. ரெல் அவீவ் என்றால் நீரூற்றின் மலை எனப் பொருள்படும். 1911ம் ஆண்டு அராபியப் பகுதியான ஹை:.பா துறை முகப் பகுதியில் யூத மருத்துவமனை ஒன்று பலஸ்தீனத்துக்கு வந்த ஜேர்மன் மொழி பேசும் ஒருவரால் நிறுவப்பட்டது. ஹீப்ரூ பல் கலைக்கழக நிறுவகர், 1914ல் சேர் ஜோன் கிறே ஹில் என்பவரின் வதிவிடத்தை விலைக்கு வாங்கினார். 1914ல், புனித நகரம் எனப்பட்ட ஜெரூசலத்தில் 90,000 யூதர்கள் வாழ்ந்தனர். இவர்களில் 75,000 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறிய யூதர்கள் ஆவர்.

யூத தேசிய நிதியம் எனப்பட்ட நிறுவனம் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் செயற்படத் தொடங்கிய சில வருடங்களில் 43 குடியேற் றங்களின் மூலம் ஒரு இலட்சத்து இருபதாயிரம் யூதர்கள் பலஸ் தீனத்தில் குடியேற்றப்பட்டனர். அச் சமயம் அராபியர்களின் தொகை ஐந்து இலட்சமாகவிருந்தது. குடியேற்றங்கள் மூலம் தமது நிலங்கள் பறிபோவதை எதிர்த்து அராபியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இக் காலப் பகுதியில் ஜெரூசலத்தைச் சேர்ந்த சியோனிச விரோத அராபியர் இருவர் கொன்ஸ்ரான்ரி னோப்பிளின் ஒத்தோமான் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியிருந்தனர்.

1914ம் ஆண்டு வேனிற் காலத்தில் துருக்கிய அரசு யூதக் குடியேற் றத்திற்கு தடை விதித்தது. துருக்கி முதலாம் உலக யுத்தத்தில் நுழைந்

பங்காற்றினார். 1940-45ம் ஆண்டுகளில் யுத்த அமைச்சராக இருந்த காலப்பகுதி யிலும் 1951- 56ம் ஆண்டுகளில் இஸ்ரேலின் ஆரம்ப நாட்களிலும் சேர்ச்சில் இஸ்ரேலுக்குச் சார்பாகவே செயற்பட்டார். அவரது நிலைப் பாடு அவரது சகாக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை. 1904ல் அவர் ஒல்ட்ஹம் தொகுதியில் கொன்சவேட்டிவ் கட்சி சார்பில் பாராளுமன்ற அங்கத்தவரா யிருந்தார். அவரது கருத்துக்களின் காரணமாக அவரைத் தொடர்ந்தும் ஆதரிக்க முடியாதெனக் கட்சி கூறியதைத் தொடர்ந்து யூதர்கள் பெரு மளவில் வாழும் ஒரு தொகுதிக்கு அவர் மாற வேண்டி நேர்ந்தது.

சார் காலத்து ரஷ்யாவிலிருந்து வரும் யூதர்களைத் தடுக்கும் 'அந்நியர் மசோதாவை' (Aliens Act) எதிர்த்து வாதாடி, அது நிறைவே றாத வண்ணம் செயற்பட்டார். எனினும், 1906ம் ஆண்டு அந்தச் சட்டம் பல திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

சாரின் ரஷ்யாவில் யூதர்களைக் கொடுமைப்படுத்துவதைக் கண்டித்து மான்செஸ்ரரில் இடம்பெற்ற கூட்டத்தில் சேர்ச்சில் உரையாற்றியிருந்தார். அக் கூட்டத்தில் ரஷ்யாவில் பிறந்த இரசாயன நிபுணரான கலாநிதி செயிம் வைஸ்மன் என்பவர் ஜெனீவாவிலிருந்து வந்து உரையாற்றினார். இருவரும் மூன்று நாட்கள் இடைவெளியில் பிறந்தவர்கள். பிற்காலத்தில் மிக நெருக்கமாக இணைந்து பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் உருவாக்கத்திற்குச் செயற்பட்டனர்.

சியோனிசவாதிகள் பிரித்தானிய அரசைப் பல கோணங்களிலும் நிர்ப்பந்தித்து வந்தனர். குடிவரவு- குடியகல்வு சம்பந்தமாக ஒரு முடிக் குரிய ஆணைக்குழு விசாரணை நடத்திய போது, அதில் சாட்சிய மளித்த ஹெர்சல், யூதர்களுக்கென ஒரு வதிவிடத்தை உருவாக்கினால் யூதர்கள் தாமாகவே பிரித்தானியாவிலிருந்து வெளியேறிவிடுவர் எனக் கூறியிருந்தார். ரஷ்ய யூதர்களைப் புரட்சியிலிருந்து விலக்கி வைப்பதற்காக சார் காலத்து ரஷ்ய உள் துறை அமைச்சர் பலஸ்தீனத்தில் யூத அரசு உருவாவதை ஆதரித்திருந்தார்.

பிரித்தானிய அரசு அவ்வப்போது அரபு மக்களைத் திசை திருப்புவதற்காக வெவ்வேறு அணுகுமுறைகளைக் கையாண்டு வந்தது. ஒரு சமயம், பிரித்தானிய அரசு கிழக்கு ஆபிரிக்காவில் ஒரு யூத அரசை ஏற்படுத்தலாம் என்றது. 1903ம் ஆண்டில் கூடிய சியோ னிசவாதிகளின் ஆறாவது மகாநாட்டில், கிழக்கு ஆபிரிக்காவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பி ஆராய வேண்டுமென ஹெர்சல்

padippakam

கேட்டுக் கொண்டார். அக் காலத்தில் ரஷ்யாவில் கிஷினெவ் (Kishinav) பகுதியில் நடந்த ஒரு கலவரத்தில் 32 யூதர்கள் கொல்லப்பட் டிருந்தனர். அங்கிருந்து வந்த பிரதிநிதி, கிழக்கு ஆபிரிக்காவுக்கு தூதுக் குழு அனுப்பும் திட்டத்திற்குக் கடினமான எதிர்ப்பை வெளியிட்டார்.

1904ம் ஆண்டு யூலை 3ம் திகதி ஹெர்சல் இறந்ததைத் தொடர்ந்து, 7வது மகாநாட்டில் கிழக்காபிரிக்கத் திட்டத்தை ஏற்றுக் கொள்வ தில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது. யூதர்கட்கான வதிவிடம் பலஸ் தீனத்தில் மட்டுமே அமைய வேண்டுமெனத் தீர்மானிக் கப்பட்டது. இதுவே சியோனிசவாதிகளின் முடிவான இலட்சிய மானது.

முதலாவது உலக யுத்தம் (1914-18) பலஸ்தீன வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அச் சமயம் மத்திய கிழக்கின் பெரும் பகுதியும் அங்கு வாழ்ந்த அராபியர்களும் துருக்கியினால் ஆளப்பட்டு வந்தனர். அந்த யுத்தத்தின் போது, துருக்கி பிரித்தானியாவுக்கு எதிராக ஜேர்மனியின் பக்கம் நின்றது. துருக்கிக்கு எதிராகத் தம்முடன் இணைபவர்களுக்கு பிரித்தானியா உதவியது. அவர்களது பிரதிநிதி யான ரீ.ஈ. லொறன்ஸ் மூலம், துருக்கிய ஆட்சியாளருக்கு எதிராக 1916ம் ஆண்டின் அராபியக் கிளர்ச்சிக்கு ஊக்கமளித் தது. அராபியர்க ளைத் தம் பக்கம் இணைப்பதற்காக, யுத்தம் முடிவடைந்த பின் பலஸ்தீனத்தில் சுதந்திரமான ஒரு பலஸ்தீன அரசை நிறுவுவதற்கு உதவுவதாகப் பிரித்தானியா வாக்குறுதி கொடுத்தது. அடுத்த வருடம், பல்ஃபர் பிரகடனத்தின் படி யூதர்களுக்குப் பலஸ்தீனத்தில் ஒரு தேசிய வதிவிடத்தை வழங்குவதற்கு உறுதியளித்தி ருந்தது. அராபியர்களும், யூதர்களும் தத்தமது அபிலாசைகள் பலஸ்தீனத்தில் நிறைவேறும் என நம்பிக்கையுடன் இருந்தனர்.

யுத்தத்தின் முடிவில் துருக்கி தனது மத்திய கிழக்கு சாம்ராஜ்யத்தை இழந்தது. தேசங்களின் அணி (League of Nations) பலஸ்தீனத்தை பிரித்தானியாவின் பொறுப்பில் விட்டது. ஓநாயிடம் ஆட்டுக் குட்டி யின் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டது.

உடனடியாகவே யூதர்களுக்கும் பலஸ்தீனியருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றன. யூதர்கள் பலஸ்தீனத்திற்குள் குடியேற்றங் கள் மூலம் குவிக்கப்பட்டனர். யூதர்களுக்கு மதம் ஒன்றே இணைப் புப் பாலமாயிருந்தது. அக் காலத்தில், ஹீப்ரூ மொழி பேச்சுவழக் கில் இருக்கவில்லை. பலஸ்தீனத்திற்குள் வந்தவர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசி வந்தனர். பிற்காலத்தில் அமெரிக்கா விலிருந்து வந்த யூதர்களுக்கும் ஐரோப்பாவிலிருந்து வந்த யூதர்க ளுக்



படிப்பகம்

குமிடையே கசப்புணர்வு நிலவியமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

1936ல் பிரித்தானியா ஒரு முழு அளவிலான அராபியக் கிளர்ச்சியை அடக்கியது. 1937ல் பீல் (Peel) ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் பலஸ்தீனத்தை யூத அரசொன்றும் அராபிய அரசொன்றுமாகவும் மூன்றாவது பகுதியாக ஜெரூசலத்தைச் சர்வதேச கட்டுப்பாட்டில் விடுவதென்றும் யோசனை முன் வைக்கப்பட்டது. இந்தத் தீர்வு ஒருவரையும் சாந்தப்படுத்தவில்லை. 1938ல் பலஸ்தீனத்தை இரண்டு அரசுகளாகத் துண்டாடும் யோசனை கைவிடப்பட்டது.

1939ல் பிரித்தானியாவும் ஜேர்மனியும் போரிட்டன. மீண்டும் அராபியர்களின் உதவி பிரித்தானியாவுக்குத் தேவைப்பட்டது. சுயெஸ் கால்வாய் திறந்திருந்தால் மட்டுமே அவர்களுக்கு வழங்கல்கள் ஒழுங்காக வந்து சேரும். இதனால் அராபியர்களைக் கவரும் நோக்கில் ஒரு நடவடிக்கை அறிவிக்கப்பட்டது. பலஸ்தீனத்திற்குள் வரும் யூதர்களின் எண்ணிக்கை அடுத்த ஐந்து வருடங்களுக்கு 75,000 ஆக மட்டுப்படுத்தப்படுமெனவும் அதன் பின் யூதக் குடியேற்றம் முற்றாக நிறுத்தப்படுமெனவும் உறுதி கூறப்பட்டது. இந்த யோசனையால் சியோனிஸ்ட்டுகள் கவலையடைந்தனர்.

இரண்டாவது உலக யுத்தம் 1945ல் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பலஸ்தீனத்தில் மோதல்கள் மீண்டும் தொடங்கின. யூதப் பயங்கரவாதக் குழுக்களான ஸ்ரேர்ண் கும்பல் (Stern Gang) இர்குன (Irgun) என்பன பிரித்தானியப் படைகளுக்கு எதிராகக் கெரில்லாத் தாக்குதல்களை நடாத்தின. 1946 யூலை 22ம் திகதி யூதப் பயங்கரவாதிகள் ஜெரூசலத்தில் பிரித்தானியப் படைத் தலைமை யகம் அமைந்திருந்த கிங் டேவிட் விடுதியைத் தகர்த்தனர்.

பிரித்தானியா பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியது. தானே உருவாக்கிய பிரச்சனையைத் தீர்க்காமலே பலஸ்தீனத்தை ஐ.நா. சபையின் மேற்பார்வையில் விடுவதாகப் பிரித்தானியாவின் அயற் செயலர் ஏனஸ்ட் பெவின் 1947 பெப்ரவரி 17ம் திகதி அறிவித்தார்.

ஐ.நா.வும் பிரித்தானியாவின் பாதையையே நாடியது. 1947 நவம்பரில் ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் பலஸ்தீனம் இரண்டாகத் துண்டாடப்பட்டு அராபியர்களுக்கு ஓர் அரசும், யூதர்களுக்கு ஓர் அரசும் நிறுவப்படும். தலைநகர் ஜெரூசலம் சர்வதேசக் கட்டுப்பாட்டில் இருக்குமெனக் கூறப்பட்டது. யூதர்கள்

padippakam

இத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் கோரிய யூத அரசு கிடை ப்பதையிட்டுத் திருப்திப்பட்டனர். இப்போதைக்கு இதை ஏற்றுக் கொள்வோம என்றனர்.

### ஐ.நா.வின் 181வது தீர்மானம்

ஐ.நா பொதுச்சபை 1947 ஏப்பிரல் 28 தொடக்கம் மே 15ம் திகதி வரை கூடி UNSCOP என்ற விசேட கமிட்டியை உருவாக்கியது. அதில் ஆறு இராஜதந்திரிகள், நான்கு நீதித் துறையினர், ஒரு பேராசிரியர் அடங்கிய 11 பேர் அங்கம் வகித்தனர்.

இவர்கள் யூன் 14ம் திகதி ஜெரூசலம் வந்தடைந்தனர். ஐந்து வாரங்களாக யூதப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர். பலஸ் தீனியர் இந்தக் குழுவின் வருகையைப் பகிஷ்கரித்தனர்.

1947 ஆகஸ்ட் 31ம் திகதி UNSCOP அதன் அறிக்கையை வெளியிட்டது. பெரும்பான்மையினரின் அறிக்கையின் படி, புனித தலங்களான ஜெரூசலமும் பெத்தலஹமும் ஐ.நா.வின் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும். பலஸ்தீனிய, இஸ்ரேலிய அரசுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சிறுபான்மையினரின் அறிக்கையின் படி பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப்படவேண்டும். பலஸ்தீனம் ஏற்றுக் கொள்ள முடிந்தவரை யூதக் குடியேற்றம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

1947 நவம்பர் 29ம் திகதி பொதுச்சபை பெரும்பான்மை அறிக்கையை ஏற்றுக் கொண்டது. இது ஐ.நா. பொதுச் சபையின் 181வது தீர்மானமாகும். இதன்படி, 10,000 சதுர மைல் விஸ்தீரண முடைய பலஸ்தீனத்தில்:

4,300 சதுரமைல் பிரதேசமே அன்றிருந்த 1,364,230 பலஸ்தீ னியருக்கு ஒதுக்கப்படும்.

5,700 சதுரமைல் பிரதேசம் 608,230 யூதர்களுக்கு வழங்கப்படும்.

33 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

13 நாடுகளன் தீர்மானத்தை எதிர்த்தன.

13 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

வாக்களிப்பில் பங்குபற்றாத நாடுகளில் பிரித்தானியா முக்கிய மானது. பிரான்ஸ், சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகியன தீர்மா னத்தை ஆதரித்த நாடுகளில் குறிப்பிடத்தக்கவை.



படிப்பகம்

கியூபா, இந்தியா, பாகிஸ்தான், துருக்கி, கிரேக்கம் ஆ∴ப்கானிஸ்தான், எகிப்து, ஈராக், லெபனான், சவுதி அரேபியா, சிரியா, யெமன் ஆகிய நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

1985ல் இஸ்ரேலில் இருந்த யூதர்களில் 18.5 சத வீதமானவர்கள் மட்டுமே அந்த நாட்டில் பிறந்தவர்கள்.

அராபியர்கள் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக்கொண்டிருந்தால் சர்வதேச அங்கீகாரத்துடன் அவர்களுக்கென்ற பலஸ்தீன அரசு ஏற்பட்டிருக்கும். அராபிய நாடுகளின் உதவியுடன் முழுப் பலஸ்தீனமும் தமது கைக்கு வருமென எதிர்பார்த்துக், கிடைக்கவிருந்த ஆட்சியை கோட்டை விட்டனர். அயல் அராபிய நாட்டு ஆட்சியாளரை நம்பி மோசம் போயினர். பிற்காலத்திலேயே காலங்கடந்த நிலையில், தாங்களே போராடுவோம் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர். சுதந்திரமாகப் போராடும் எந்த ஒரு விடுதலை இயக்கத்துக்கும் வல்லரசுகள் உதவப் போவதில்லையென்பதை பலஸ்தீனியர் இன்று உணர்ந்துள்ளனர்.

இரு தரப்பினருக்குமிடையே மோதல்கள் தீவிரமடைந்தன. பிரித்தானியா படிப்படியாகத் தமது நிலைகளைக் கைவிட்டது. அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக அராபியரும் யூதரும் போட்டி போட்டனர். இரு தரப்பினரதும் மோதல்களின் பயனாகச் சாதாரணப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 1948 மே 14ம் திகதி பிரித்தானியாவின் கடைசித் துருப்பினரும் வெளியேறினர்.

யூதர்கள் இஸ்ரேல் அரசைப் பிரகடனம் செய்தனர். ரெல் அவீவில் 1948 மே 14ம் திகதி இஸ்ரேலைச் சுதந்திர நாடாக டேவிட் பென் கூரியன் அறிவித்தார். சில மணி நேரத்தில் எகிப்து, ஜோர்டான், ஈராக், சிரியா, லெபனான் ஆகிய நாடுகளின் படைகள் இஸ்ரேலுக்குள் புகுந்தன. ஒரு மாத காலச் சண்டையின் பின், ஐ.நா. சமாதானத் தூதுவரான கவுன்ட் ∴போல்க் பேர்ணடொட் (Count Folke Bernadotte) ஒரு யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தார். இந்த ஏற்பாட்டால் இஸ்ரேல் பாதுகாக்கப்பட்டது. தொடர்ந்தும் சண்டையிட இஸ்ரேலிடம் ஆயுதத் தட்டுப்பாடு தடையாய் இருந்தது. புதிய அரசிடம் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் உற்பத்தி செய்யும் திறன் இருக்கவில்லை. இஸ்ரேலைப் பாதுகாக்கவே ஐ.நா. சமாதானம் பேசியது.

இஸ்ரேலிடம் பணம் தீர்ந்து போயிருந்த நிலையில், அது தனது முன்னணி உறுப்பினரான கோல்டா மேயரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது. இஸ்ரேலின் சனத் தொகையை விடக் கூடுத

padippakam

லான தொகையான யூதர்கள் அமெரிக்காவிலேயே இருந்து வந்துள்ளனர். நான்கு வாரங்களில் அவர் ஐந்து கோடி டொலர்களைச் சேகரித்து இஸ்ரேலைக் காப்பாற்றினார். 1948ல் ஐந்து கோடி டொலர்கள் என்பது இன்றைய நாட்களில் எத்தனை கோடி பெறுமென்று யோசித்துப் பாருங்கள்.

அமெரிக்காவிடமிருந்து பெற்ற பணத்தைக் கொண்டு அமெரிக்க, பிரித்தா னிய உதவியுடனும் இஸ்ரேல் சண்டையை யூலை மாதம் மீண்டும் ஆரம்பித்தது. செப்டம்பர் மாதம், மீண்டும் குறுக்கிட்ட அதே ஐ.நா. பிரதிநிதியை அராபிய நலனுக்கு உதவுவதாகக் கூறி யூதப் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். ஒக்டோபரில் மீண்டும் ஆரம்பமான போரில் இஸ்ரேலின் கை ஓங்கியது. மாத முடிவில் கலிலியிலிருந்து (Galilee) அராபியப் படைகளை அப்புறப்படுத்திய இஸ்ரேல், லெபனானை யுத்தத்திலிருந்து விலக வைத்தது. பெயரளவில் ஐ.நா. யுத்த நிறுத்தக் கோரிக்கையை விடுத்துக் கொண்டிருக்கையில், தென்பகுதியில் முன்னேறிய இஸ்ரேல் எகிப்தையும் யுத்தமுனையிலிருந்து வெளியேற்றியது.

1949 அளவில் சகல தரப்பினரும் சமாதானம் பற்றிப் பேசினர். பெப்ரவரி 24ம் திகதி எகிப்து இஸ்ரேலுடன் ஒரு தற்காலிக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

யுத்தத்தின் மூலம் இஸ்ரேல் பலஸ்தீனத்தின் முக்கால்வாசிப் பிரதேசத்தைத் தனதாக்கிக் கொண்டது. அராபியருக்கு சிறுபகுதியே மிஞ்சியது. ஒரு பலஸ்தீன அரசை ஏற்படுத்துவதென்பதற்கு இடமே இல்லாது போயிற்று. தென் பகுதியில், காசா பிரதேசத்தை எகிப்து எடுத்துக் கொண்டது. ஜோர்தான் நதிக்கு மேற்கே மேற்குக் கரையோரத்தை, அக் காலத்தில் ற்ரான்ஸ் ஜோர்டான் என அழைக்கப்பட்ட, ஜோர்டான் எடுத்துக் கொண்டது. ஜெரூசலம் ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்குமிடையே பிரிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தமானது தற்காலிகமானது என்பதை இருசாராரும் உணர்ந்து கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தாயாராகினர். எவ்வாறாயினும் இஸ்ரேல் யுத்தத்தின் மூலம் பெறுமதி மிக்க நிலத்தை அபகரித்ததுமல்லாமல் யுத்தத்தின் மூலம் நல்ல அனுபவங்களையும் பெற்றுக் கொண்டது.

யுத்தத்தினால் ஆறரை இலட்சம் பலஸ்தீனியர் அயல் அராபிய நாடுகளுக்கு அகதிகளாய் சென்றதாக ஐ.நா. மதிப்பிட்டிருந்தது. இன்றும் இலட்சக் கணக்கான பலஸ்தீனியர் அரபு நாடுகளில் அகதி வாழ்க்கையையே வாழுகின்றனர்.



படிப்பகம்

padippakam

## *இயல் - 6*

# பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தோற்றமும் எதிர்காலமும்

1954ம் ஆண்டு எகிப்தின் முடியாட்சி கவிழ்ந்தது. அதற்குச் சில காலம் பின்னர், நாசர் எகிப்தின் ஜனாதிபதியானார். அவர் சோவியத்தின் உதவியுடன் எகிப்தின் இராணுவத்தைப் பலப்படுத்தினார். இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ஏற்ற வகையில் இஸ்ரேலியக் கப்பல்களுக்கு சுயெஸ் கால்வாயைத் தடை செய்தார். அதே சமயம், நைல் நதியை அஸ்வானில் அணை கட்டுவதன் மூலம் நீர்ப்பாசனத்தையும், மின் சக்தியையும் பெறும் நோக்கில், பிரிட்டனையும் அமெரிக்காவையும் நிதி கேட்டார். முதலில் இணங்கிய இரு நாடுகளும் பின்னர் உதவி வழங்க முடியாதென்றன.

அச் சமயம் பிரிட்டனும் பிரான்சும் கூட்டாக சுயெஸ் கால்வாய் கம்பனியை நடாத்தி வந்தன. 1956ம் ஆண்டு யூலை 26ம் திகதி சுயெஸ் கால்வாயை நாசர் தேச உடமையாக்கி அதிலிருந்து கிடைக்கும் பெரும் வருமானத்தை அஸ்வான் அணை கட்ட உபயோகிக்கப் போவதாக அறிவித்தார். நாசரின் நடவடிக்கை கொலனிய, வல்லரசுகள் போக உலகின் பெரும்பாலான நாடுகளால் மகிழ்ச்சியு டன் வரவேற்கப்பட்டது.

பிரிட்டனும் பிரான்சும் கால்வாயை எப்படியாகிலும் மீளப் பெறுவோம் எனச் சபதமிட்டனர். இஸ்ரேலுடன் இணைந்து செயற்படத் திட்டம் தீட்டின. எகிப்து எதிர்பாராத நிலையில் ஒக்டோபர் 29ம் திகதி இஸ்ரேல் தாக்குதலைத் தொடுத்து சுயெசுக்கு வடக்கில் உள்ள சினாய் பிரதேசத்தைத் தாண்டியது. மறுநாள் இஸ்ரேல் சுயெஸ் கால்வாய் நோக்கி முன்னேறியது. கால்வாயைப் பாதுகாப்பது என்ற போர்வையில் இஸ்ரேலையும் எகிப்தையும்



படிப்பகம்

padippakam

பின்வாங்குமாறு பிரிட்டனும் பிரான்சும் கோரின. எகிப்து அதற்கு மறுத்தது.

பிரிட்டனும் பிரான்சும் எகிப்துக்குள் ஊடுருவின. இத் தாக்குதலை உலகம் முழுவதும் கண்டித்தது. எனவே பிரித்தானியாவும், பிரான்சும், இஸ்ரேலும் பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டன. நாசர் வெற்றிவாகை சூடினார். சுயெஸ் கால்வாய் எகிப்தின் வசமானது.

சுயெஸ் யுத்தத்திற்குப் பின் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றன. ஈராக்கில் நடந்த ஆட்சி மாற்றம் அவற்றில் முக்கியமானது.

பலஸ்தீனியருக்கு இப்போது உண்மை புலனாகியது. வெளியாரை நம்பித் தமது போராட்டத்தை நடாத்த முடியாதென்பது தெளிவானதால், 1964ல் பலஸ்தீன விடுதலை இயக்கம் உதயமானது. கெரில்லாத் தாக்குதல்கள் ஆரம்பமாகின.

போராளிகளுக்கு எகிப்திய உதவி வருவதைத் தடுக்கவும் அப் பிராந்தியத்தில் எகிப்து ஒரு சக்தி மிக்க நாடாவதைத் தடுக்கும் நோக்கிலும் 1967ம் ஆண்டு யூன் 5ம் திகதி எவ்விதமான போர்ப் பிரகடனமும் இல்லாமல் இஸ்ரேலிய விமானங்கள் எகிப்திய விமானப் படையைக் குண்டு வீசி நிர்மூலமாக்கின. அதைத் தொடர்ந்து விமானத் தாக்குதல் பயம் இன்றி சினாய்குள் இஸ்ரேலிய தாங்கிகள் இலகுவாக முன்னேறின.

இஸ்ரேல் தீர்க்கமான வெற்றியைப் பெற்றது. இஸ்ரேலியர்களுக்கு காசா நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டிற்கும் கொண்டு வர முடிந்தது. அண்மையில் இந்த காசா நிலப் பரப்பைப் பற்றிச் செய்திகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. 2007ல் ஹமாஸ் இயக்கம் அங்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அந்தப் பகுதிக்கு பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இஸ்ரேல் தடை விதித்ததும் சென்ற ஆண்டு உணவு, உடைகளைக் கொண்டு சென்ற துருக்கியக் கப்பல் ஒன்றை சர்வதேசக் கடற்பரப்பில் தடுத்து நிறுத்தி அக் கப்பலில் இருந்த ஒன்பது பேரைக் கொன்றதும் பலருக்கு நினைவிருக்கலாம்.

அந்த காசா நிலப்பரப்பானது ஒரு ஒடுக்கமான நிலப்பரப்பு. 45 கி. மீட்டர் நீளமும் 8 கி. மீட்டர் அகலமும் கொண்ட பகுதி. இன்று அங்கு 15 இலட்சம் பேர் மிக நெருக்கடியான சூழலில் வாழ்கின்றனர்.



படிப்பகம்

padippakam

காசாவில் உள்ள மக்களில் 80 சத வீதமானவர்கள் வெளியில் இருந்து வரும் உதவிகளிலேயே தங்கி வாழ்கின்றனர். நாற்பது சத வீதமான மக்களுக்கு வேலை இல்லை.

இஸ்ரேலின் "சாதனை"கள் சில பின் வருமாறு: 1948-1973 வரை இஸ்ரேல் தரப்பு உயிரிழப்பு 9,520, அதே சமயம் பலஸ்தீனியரின் உயிரிழப்பு 46, 850 ஆகும். இலட்சக்கணக்கானவர்களை நாட்டை விட்டுத் துரத்தியமை. இன்று உலக நாடுகளிடையே இராணுவ பலத்தில் இஸ்ரேல் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. அதன் வசம் இருநூறு அணு ஆயுதங்கள் உள்ளன.

ஈரான் அணு ஆயுதம் வைத்திருக்கக் கூடாது என்று கூறும் 'சமாதான விரும்பி'களுக்கும் வட கொரியா அணுகுண்டு தயாரிக்கப் படாதென்று கூறும் 'காந்தியவாதி'களுக்கும் இஸ்ரேலிடம் உள்ள அணு ஆயுதங்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதென்று சதாம் ஹுசேனைக் கொன்று அந்த நாட்டைச் சுடுகாடாக்கிய அமெரிக்காவுக்கு இஸ்ரேல் அணு ஆயுதம் வைத்திருப்பது பிரச்சினைக்குரியதல்ல.

1982ல் அண்டையிலுள்ள லெபனான் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. ஒரு மாதகாலம் யுத்தம் நடத்தியது. அந்த யுத்தத்தால் பொஸ்பரஸ் குண்டுகளை வீசி மிகப்பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. அத்தகைய குண்டுகளை வியட்நாம் மீது முன்னர் அமெரிக்கா வீசியது. இப்போது லெபனான் மீது இஸ்ரேல் ஏவியிருக்கிறது.

கடுகளவு பொஸ்பரஸ் உடம்பில் பட்டால் அந்த இடம் வெந்து போகும், வேதனையால் துடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இந்த உண்மையை இஸ்ரேல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜஹாவாகல் ஒன் (Zahavagal-On) என்ற அம்மையார் அம்பலத் திற்குக் கொண்டு வந்திருந்தார். அதனை இஸ்ரேல் அமைச்சர் ஜேக்கப் எடரி ஒப்புக் கொண்டிருக்கிறார்.

காஸாப் பகுதியில் வீசப்பட்ட நவீன ஆயுதங்களைப் பற்றிக் கேட்டால் "புதிதாய் செய்த பொஸ்பரஸ் குண்டுகளை லெபனான் மீது வீசி, சோதித்துப் பார்த்தோம்" என்று அமைச்சர் பதில்



படிப்பகம்

padippakam

சொன்னார்.

லெபனான் மீது பெஸ்பரஸ் குண்டுகளை மட்டும் வீசவில்லை. கொத்தணிக் குண்டுகளையும் வீசியிருந்தது. ஒரே குண்டு வெடித்து அதிலிருந்து ஐம்பது, நூறு குண்டுகள் சிதறும். அவைகளும் வெடிக்கும். அதன் அழிவு பயங்கரமாயிருக்கும்.

இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கையில் ஐ.நா. என்ன செய்து கொண்டிருந்தது என அப்பாவிகள் கேட்கக் கூடும். அது வேளா வேளைக்குக் கூடி அவ்வப்போது தீர்மானங்களை எடுத்திருந்தது. 1948ல் இருந்து இன்று வரை பலஸ்தீனம் தொடர்பாக (230) இருநூற்றி முப்பதுக்கு மேற்பட்ட தீர்மானங்களை எடுத்திருந்தது. அவற்றில் ஒன்றுதானும் அமுல் நடத்தப்படவில்லை.

காசாவில் உண்மை நிலை அறியும் குழு ஒன்றும் 2009 செப்ரம்பரில் ஒரு பாரதூரமான பரிந்துரையை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பித்திருந்தது. இவையனைத்தும் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தினால் கிடப்பில் போடப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம்.

'ஐ.நா. ஸ்தாபனம் என்பது அமெரிக்காவுக்குரியது. எங்களுக் குரியதல்ல'வென இந்தியாவின் முன்னாள் நீதியரசரும் முற்போக்கு வாதியுமான திரு. கிருஷ்ண அய்யர் "UN is not for us. It is for U.S." என்று ஆங்கிலத்தில் அழகாகக் கூறியிருந்தார் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

யூதர்கள் அகதி வாழ்க்கையிலிருந்து விடுபட்டு அவர்கள் கூறிய 'புனித நாட்டுக்குச்' செல்ல வேண்டுமென்றனர். இஸ்ரேலின் உருவாக்கத்திற்குப் பின்பும் யூதர்கள் தாம் பிறந்த நாடுகளில் அதிக அளவில் இருப்பதேன்? இஸ்ரேலில் இருக்கும் யூதர்களை விடப் பல மடங்கு யூதர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். 1993ல் கணிப்பிட்ட விபரம் பின்வருமாறுள்ளது:

| 1993ல் (கிட்டிய ஆயிரத்தில்) | யூதர்கள் |
|---|---|
| இஸ்ரேல் | 3,755,000 |
| மே. ஐரோப்பா | 1,236,000 |
| கி. ஐரோப்பா | 1,447,000 |
| ஐ. அமெரிக்கா | 5,950,000 |
| கனடா | 305,000 |



படிப்பகம்

padippakam

| | |
|---|---|
| ஆபிரிக்கா | *108,000* |
| தெ. அமெரிக்கா | *504,000* |
| மெக்சிக்கோ | *40,000* |
| மொத்தம் | *13,345,000* |

இஸ்ரேலில் உள்ள யூதர்களை விடக் கூடுதலான யூதர்கள் அமெரிக்காவிலேயே வாழ்கின்றனர். இதன் காரணமாகவே யூதர்கள் அமெரிக்க அரசியலில் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அமெரிக்கா இஸ்ரேலின் அடாவடித்தனங்க ளுக்கு பக்கபலமாயுள்ளது. பல்வேறு நாடுகளிலிருந்தும் யூதர்கள் இஸ்ரேலில் குடியேற்றப்பட்ட பின்னரும், இஸ்ரேலை விட அமெரிக்காவில் கூடுதலான யூதர்கள் உள்ளனர். யூதர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்றவர்கள் அதை நியூயோர்க்கின் நகரில் ஏற்படுத்தாதது ஏன்? இஸ்ரேலில் உள்ள யூதர்களை விட இஸ்ரேலுக்கு வெளியே இரு மடங்கு அதிகமான யூதர்கள் உள்ளனர். யூதர்களைப் பற்றிக் கவலைப்பட்ட பிரித்தானியவால் இலட்சக் கணக்கில் அகதிகளாக்கப்பட்ட பலஸ்தீனர்களைப் பற்றி சிந்திக்க நேரமில்லாதுள்ளது.

இன்றைய சூழலில் இஸ்ரேலைக் கலைத்து அங்கு யூதர்களை விரட்டி பலஸ்தீனர்களைக் கொண்டு போய்க் குடியேற்ற வேண்டும் எனக் கூறுவது நியாயமான தீர்வாக அமையாது. பலஸ்தீன அரசொன்றை ஏற்படுத்தி அதில் அம் மக்கள் சுதந்திரமாய் செயற்பட அனுமதிப்பதே இப்போதைய தேவை.

டிலிப் ஹிரோ (Dilip Hiro) என்பவர் *1996*ல் ‘வாக்குறுதி அளிக்கப்பட்ட நாட்டைப் பகிர்ந்து கொள்ளல்’ என்ற நூலை வெளியிட்டுள்ளார். அவர் இரு தரப்பு நியாயங்களையும் எடுத்துக் கூறி பலஸ்தீனியர்கள் நிம்மதியுடன் அங்கு வாழ வழி செய்ய வேண்டுமென்கிறார்.

இன்று இஸ்ரேலியப் பிரஜையின் அடையாள அட்டையில் தேசிய இனம்- யூதன் அல்லது அராபியன் என்றிருக்கும். அவர்கள் எந்த நாட்டுப் பிரஜை என்ற இடத்தில் இஸ்ரேலியன் என்றிருக்கும், என அவர் தனது நூலிற் கூறியுள்ளார். குறித்த நூலாசிரியர் இஸ்ரேலுக்கு சென்று அங்குள்ள யூத அரச அதிகாரிகளையும் மக்களையும், அராபியர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று,



படிப்பகம்

padippakam

அங்குள்ள நிலை பற்றி அறிந்து, அவற்றைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஹீப்ரு மொழி இன்றைய இஸ்ரேலின் உருவாக்கத்தின் போது பேச்சு வழக்கு அற்றுப் போய் இருந்தது. அதனாலேயே சியோனிசவாதிகள் ஆரம்ப காலத்தில் ஹீப்ரு மொழி படிப்பிப்பதற்கு பாடசாலையை நிறுவினர். ஆரம்பத்தில் சியோனிசம் ஒரு மதத் தத்துவமாய் மட்டுமே இருந்தது. அதன் பின்னர் அதனை அரசியல் கருவியாக்கினர் எனவும் அவர் கூறியுள்ளார்.

வாசகர்களுக்கு இஸ்ரேல் பற்றிய ஓர் அடிப்படை விளக்கத்தை தரும் வகையில் இதுவரையில் வரலாற்றுத் தகவல்களைத் தர முற்பட்டுள்ளேன். இது சகலருக்கும் பிரயோசனமுள்ளதாயிருக்குமென நினைக்கிறேன். அடுத்து வரும் பின்னிணைப்புக்களில் தமிழ்த் தேசியவாதிகள் பலரும் இஸ்ரேலின் முன் மாதிரியைப் பின்பற்றுகிற ஒரு போக்கைக் கொண்டிருப்பது விமர்சிக்கப்படுவது டன் பலஸ்தீன மக்களின் விடுதலையைப் பற்றிய உலக முற்போக்காளர்களது நிலைப்பாடு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்

padippakam

## இணைப்பு 1

# இஸ்ரேலைப் பின்பற்றித் தனிநாடு கோரியவர்கள்

ஏராளமான நூல்கள் குறிப்பிடும் யூதர்களின் "புண்ணிய பூமிக்கு மீண்டும் செல்வது" என்ற கோஷத்திலிருந்தே தமிழ்தேசியவாதிகள் இஸ்ரேலைப் பற்றி விளங்கிக் கொண்டனர் என்பதில் சந்தேகம் இல்லை.

தேசியவாதிகள் "ஆண்ட பரம்பரை மீள ஆள நினைப்பதில் தவறென்ன" என்று கேள்வி எழுப்பினர். யூத மதத்தினருக்கு ஒரு நாடு வேண்டுமென்ற கோஷத்தை ஏற்றுக் கொண்டு இந்தியா முழுவதும் இந்துக்களின் நாடாகப் பிரகடனப்படுத்தினால் இந்தியாவின் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிடுமா?

யூதர்களை ஆரம்ப கட்டத்திலேயே ஒரு தேசிய இனமாகச் சிலர் கருதினர். இஸ்ரேல் 1948ல் உருவாக்கப்பட்ட போது அங்கே பலமொழிகளைப் பேசும் யூதர்கள் இருந்தார்கள் என்பதை நாம் இங்கு அவதானிக்கலாம். எனவே மொழி அடிப்படையில் இஸ்ரேல் உருவாக்கப்படவில்லை. மத அடிப்படையிலேயே அந் நாடு உருவாக்கப்பட்டது. ஏனெனில் 20ம் நூற்றாண்டில் இஸ்ரேலில் குடியேற்றப்பட்டவர்கள் யூத மதத்தவராய் இருந்தனர். அதே சமயம் பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களாயுமிருந்தனர்.

தமிழ்த் தேசியவாதிகள் (மே 2009 வரை) தமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாகப் பங்களாதேஷையும், பிற்காலத்தில் கொசோவோவையும் உதாரணம் காட்டினர். தாய்வானைப் பின்பற்றி நாம் முன்னேற வேண்டுமென்றும் சிலர் கூறுவர். தேசியவாதிகள் முன்மாதிரியாகக் காட்டும் நாடுகளில் முதலாளித்துவ சுரண்டல் உச்சத்தில் உள்ளதை நாம் காண்கிறோம்.

தமிழ் தேசியவாதிகள் ஆரம்பம் தொட்டே ஏகாதிபத்தியச் சார்பு நிலைப் பாட்டைக் கொண்டிருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. திருகோணமலையிலிருந்து பிரித்தானிய கடற்படைத் தளத்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அப்புறப்படுத்திய போது



படிப்பகம்

padippakam

தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், தளங்கள் அகற்றப்படுவதை எதிர்த்துத் 'மாட்சிமை தாங்கிய மகாராணிக்குத்' தந்தியடித்து அக் கட்சியின் ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டினர்.

தமிழரசுக் கட்சியினர் நெற்காணி மசோதாவையும் எதிர்த்தார்கள். நெற்காணி மசோதா முதலிற் பிரேரித்தபடி முழுமையாக நடைமுறைப்பட்டிருந்தால், பிற்காலத்தில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் பெருமளவில் ஏற்பட வாய்ப்பிரு ந்திருக்காது. எனினும் பிரபுத்துவ மிச்ச சொச்ச வாரிசுகள் வர்க்க நிலைப்பாட்டில் அதை எதிர்த்தனர். பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எழுதிய பின்பு அதன் அமுலாக்கத்திற்கு வசதியாக அரசாங்கத்துடன் ஒத்துழைக்காது அமிர்தலிங்கம் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து அந்த ஒப்பந்தம் கிழிபடுவதற்கு உடந்தையாய் இருந்தார். தனது இறுதி நாட்களில் அமிர்தலிங்கம் ஒப்பந்தம் கிழிபடுவதற்குத் தானும் ஒரு காரணம் எனத் தனது வாயாலே ஒத்துக் கொண்டார்.

தமிழ்த் தேசியவாதிகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் உணர்ச்சி யூட்டும் வகையில் மக்களைத் திசை திருப்பினரே ஒழிய, ஒரு விடயத்தையும் முழுமை யாக ஆராய்ந்தது கிடையாது. இஸ்ரேல் யூதர்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டிலேயே அவர்கள் இஸ்ரேலில் உருவாக்கத்தை வரவேற்றனர். கனன் நாடான இஸ்ரே லில் இருந்து துப்பாக்கி முனையில் விரட்டப்பட்ட பலஸ்தீன மக்க ளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

பாகிஸ்தானைப் பலவீனப்படுத்தும் நோக்கிலேயே பங்ளாதேஷ் பிரிவி னையை இந்தியா ஊக்குவித்தது. ஆயுதப் போராட்டம் நீண்டு சென்று கம்யூனிஸ்ட்டுக்கள் பங்ளாதேஷில் ஆட்சியைக் கைப்பற்ற வாய்ப்பு இருந்த தறுவாயில், இந்தியா தனது படைகளை அனுப்பிக் கல்கத்தாவில் ஒளித்திருந்த முஜிபூர் ரகுமானை பங்ளாதேஷின் ஜனாதிபத்தியாக்கியது. இன்றும் பங்ளாதேஷ் பெண்கள் இந்தியா வுக்கு விரோதமாகவே உள்ளனர். இந்தியப் படைகள் அங்கு செய்த அட்டூழியங்களே- குறிப்பாகப் பெண்கள் மீதான பாலியல் வன்முறையே- அவர்களின் இந்த நிலைப்பாட்டிற்குக் காரணம்.

இந்தியாவுக்கும் பங்ளாதேஷுக்குமிடையே 2500மைல் நீள எல்லையுண்டு. முட்கம்பி வேலியிலான அந்த எல்லை நெடுகிலும் இந்திய எல்லைக் காவற் படையுண்டு. மிகவும் வறுமையால் வாடும்



படிப்பகம்

padippakam

பங்ளாதேஷின் எல்லைப்புறத்துக்கு வந்தால் அவர்களை இந்தியப் படையினர் எச்சரிக்கையின்றிச் சுட்டுத் தள்ளுகின்றனர். கடந்த பத்து ஆண்டுகளில் 900 பங்ளாதேஷ் மக்கள் இந்தியக் காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஒரு அண்மைய செய்தி கூறுகிறது.

தனிநாடாகி 40 வருடங்களாகியும் உலகில் மிகப் பின்தங்கிய நாடாக உள்ள பங்ளாதேஷின் ஆடைத் தொழிற்சாலைகள் பல் தேசியக் கம்பனிகளால் மிக மோசமாகச் சுரண்டப்படுகின்றன. சென்ற ஆண்டு அங்குள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் - ஏகப் பெரும்பாலானவர்கள் பெண்கள- மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மிக அற்ப சம்பளமே ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது. தனிநாடு பெற்றதால் பங்ளாதேஷ் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு விடுதலை எதுவும் கிடைக்கவில்லை.

கொசோவோ பிரிந்தபோது, அதையும் சுட்டிக்காட்டி, தனிநாட்டுக் கோரிக்கை க்கு இன்னொரு உதாரணம் என்றனர். 1974ல் டிட்டோ யூகோஸ்லாவியாவுக்குப் புதிய யாப்பு வரைந்தபோது, கொசோவோவிற்கு சேர்பியாவிற்குள் ஒரு குடியரசு அந்தஸ்து வழங்கியிருந்தார். 1989ல் மிலோசோவிச் அந்தச் சுயாட்சியை கலைத்ததும், அதன்பின் அடக்குமுறையைப் பிற்போக்குவாதிகள் கட்டவிழ்த்தும் விட்டனர்.

வல்லரசுப் போட்டியில் கொசோவோ சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. கொசோவோ மக்கள் எதிர்பார்த்த விடுதலை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இன்று நேட்டோப் படைகள் அங்குள்ளன. கொசோவோ தனக்கென ஓர் அரசியல் யாப்பைச் சுதந்திரமாக உருவாக்க முடியாதபடி நேட்டோ ஆதிக்கம் உள்ளது. கொசோவோ சட்டியிலிருந்து நெருப்புக்குள் விழுந்துவிட்டது.

'நாடு கடந்த தமிழீழ அரசின்' முக்கிய பிரமுகர் ஒருவர் லண்டன் தமிழ் ஒளிபரப்பின் போது, தமிழ் மக்கள் தாய்வானைப் பார்த்து முன்னேற வேண்டுமென்றார். தாய்வான் ஆட்சி அமெரிக்காவின் கைப்பொம்மை ஆட்சி என்பது இந்தப் பிரமுகருக்கு தெரியாததல்ல.

தேசியவாதிகளுக்கு நாட்டில் அந்நியப் படை வருவதோ, தங்குவதோ பிரச்சினை இல்லை. கம்யூனிஸ்ட்டுகள் அதிகாரத்தில் இருக்கப்படாதென்பதே அவர்களின் நிலைப்பாடு.



படிப்பகம்

வியட்நாமில் விடுதலைப் படைகள் சைகோனைக் கைப்பற்றியபோது 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் வியட்நாமிய மக்களின் வெற்றியை வாழ்த்தாமல் சைகோனில் இருந்த ஒரு சில வட்டிக்கடைக்காரத் தமிழர் பற்றியே கவலை தெரிவித்து எழுதினார்.

உலகில் பல்வேறு இடங்களில் விடுதலைப் போராட்டங்கள் இடம் பெறுகின்றன. தேசியவாதிகள் மேற்குலக ஆதரவுடன் பிரிவினை கோரும் பிற்போக்குவா திகளையே முதன்மைப்படுத்தி வரும் வேளை உண்மையான விடுதலைப் போராட்டங்களைப் பற்றி வாய்திறப்பதில்லை. காஷ்மீர் மக்கள் போராட்டம் பற்றியோ இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இடம் பெறும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் பற்றியோ ஏதும் கூறமாட்டார்கள். இந்தியாவைப் புண்படுத்தப்படாதென்பர். இன்றும் இந்திய ஆலோசனைப் படியே இவர்கள் செயற்படுவது நோக்குதற் குரியதாகும்.



எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றியதன் மூலம் அரபு தேசிய வாதத்திற்கு உணர்வும் வலுவும் சேர்த்தவர் கமால் நாசர் கியூபத் தலைவர் ஃபிடல் காஸ்ரோவுடன் காணப்படுகிறார்.



பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத் பாலஸ்தீன மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர். அவரை இஸ்ரேலிய சீயோனிசவாதிகள் நம்பமுடியாத பயங்கரவாதி என்றனர்.

padippakam




**காஸா மீதான இஸ்ரேலின் யுத்த குற்றங்கள்**



**இஸ்ரேலிய டாங்கியை எதிர்த்து கல் எறியும் பலஸ்தீனச் சிறுவன்**

படிப்பகம்

padippakam

## இணைப்பு - 2

# பலஸ்தீனத்தில் ஒரு சுதந்திரநாடு உருவாக்கும் பணியில் முற்போக்குச் சக்திகளின் பங்கு

வின்ஸ்ரன் சேர்ச்சில் யூதர்களை நல்ல யூதர்கள் கெட்ட யூதர்களென இருவகைப் படுத்தினார். கம்யூனிஸ்ட்டுகளையும், பொதுவில் இடதுசாரிகளையும் ஆதரித்த யூதர்களைக் கெட்ட யூதர்களென்றார். வலதுசாரியினரையும், சியோனிஸ்ட்டுகளையும் ஆதரித்த யூதர்களை நல்ல யூதர்களென்றார். சேர்ச்சில் ஒரு மோசமான பிற்போக்குவாதியாகவும் கம்யூனிஸ்ட்டுகளை மூர்க்கத்தனமாக எதிர்ப்பவராகவும் இருந்தார். அவரது கண்முன்னே மகத்தான சோவியத் யூனியன் ஸ்டாலின் தலைமையிலான வழி காட்டலில் பல்வேறு சதிகளையும், எதிர்ப்புரட்சிகளையும், இறுதி யில் ஹிட்லரின் தாக்குதலையும் முறியடித்து விடுதலை விரும்பும் உலக மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது.

உலகிற்கு கம்யூனிச சித்தாந்தத்தை தந்த கார்ல் மார்க்ஸ், சோஷலிசக் கொள்கையை ஏற்றுக் கொண்ட விஞ்ஞானி ஐன்ஸ்ற்றைன், சிவப்பு ரோஜா என அழைக்கப்பட்ட போராளி ரோசா லக்சம்பேர்க் இன்னும் ஏகப்பட்ட பிரபலமானவர்கள் பிறப்பால் யூதர்கள் என்றபோதும் அன்றாட வாழ்க்கையில் யூத மதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவே விளங்கினர்.

இஸ்ரேலில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியுள்ளது. சுயநிர்ணய உரிமையை அக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரிக்கிறது. அராபிய மக்கள் வாழும் பகுதியில் யூதக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் அரசின் நடவடிக்கையை அக் கட்சி எதிர்க்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியில் பல யூதர்கள் அங்கத்தவராயுள்ளனர். அவ்வாறே இஸ்ரேலில் உள்ள அராபியர்கள் இஸ்ரேலியக் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரிக்கின்றனர்.

பலஸ்தீனத்தில் ஆரம்ப நாட்களில் குடியேற்றப்பட்ட யூதர்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் ரஷ்யாவிலிருந்தும் வந்தவர்கள். அவர்களில் சாதாரண உழைக்கும் மக்களே ஏகப் பெரும்பான்மை



படிப்பகம்

padippakam

யினர். அவர்களுக்கு ஏற்கனவே கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்றவர்களின் போதனைகள் தெரிந்திருந்தன. அவர்கள் மத்தியில் பொதுவுடைமைச் சித்தாந்தம் பிரபலமாய் இருந்ததில் வியப்பில்லை. ஹடாஷ் (Hadash) என்ற யூதக் கம்யூனிஸ்ட் கட்சியினர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இரகசியத் தொடர்பு களை வைத்திருந்தனர்.

ஆரம்பகால கிப்பூத்ஸ் (முடைடிரவண) பண்ணைகள் சோஷலிச அடிப்படையில் இயங்கின. கூட்டுறவுப் பண்ணைகளில் அவற்றிற் கெனத் தனியான கம்யூனிஸ்ட் கட்சிக் கிளைகள் இருந்தன.

1948ல் நவீன இஸ்ரேல் உருவான பின் பண்ணைகள் தனியார் மயப்படுத்தப்பட்டன. நுகர்வுக் கலாச்சாரத்தை எதிர்த்து நிற்க முடியாத நிலையில் கிப்பூத்ஸ் பண்ணைகள் காலப் போக்கில் மறைந்து போயின.

நவீன இஸ்ரேல் உருவாவதற்கு முன்பே அன்றைய சோவியத் யூனியனில் 1934ம் ஆண்டு யூத சுயாட்சிப் பிரதேசமொன்று ரஷ்ய கிழக்கு சைபீரியாவில் உருவானது. அன்றைய சோவியத் யூனியனில் சகல இனத்தவர்களுக்கும் அவரவர் மொழியை வளர்ப்பதற்கும், தத்தம் கலாசாரத்தை பேணவும் ஏற்ற சுயாட்சிப் பிரதேசங்கள் இருந்தன. தேசிய இனங்களின் பிரச்சினை தொடர்பாக பல அரிய கட்டுரைகளை எழுதியவர் ஸ்டாலின். அவர் ஒரு சிறுபான்மை இனத்தவராய் இருந்த போதும் மகத்தான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பிரதமராகவும் தலைமை தாங்கியவர். லெனினின் காலத்திலேயே தேசிய இனங்கள் தொடர்பான அனைத்து வேலைகளுக்கும் பொறுப்பாயிருந்தவர். தேசிய இனங்கள் தொடர்பான அவரது கட்டுரைகள் மார்க்சிசத்தை வளர்த்தெடுப்பதற்கு பாரிய பங்களித்தன.

லெனின் இறந்த பின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பதவிக்கு ஸ்டாலின் பெயர் முன்மொழியப்பட்டது. இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர், பல மொழிகளைச் சரளமாகப் பேசக் கூடிய வல்லமையுள்ள ட்றொட்ஸ்கி. ட்றொட்ஸ்கியின் நீண்ட சொற்பொழிவு பல மொழிகளில் இருந்தது. ஸ்டாலின் மிகச் சுருக்கமாகவே பேசி தன்னைத் தேர்ந்தெடுக்க வேண்டிக் கொண்டார். மத்திய கமிட்டியில் ட்றொட்ஸகிக்கு அவரின் பெயரை அனுமதிக்கக் கூட ஆள் இருக்க



படிப்பகம்

padippakam

வில்லை. ட்ரொட்ஸ்கிக்கு அவரின் ஒரே வாக்கு மட்டுமே கிடைத்தது. ஸ்டாலின் ஏனைய அனைத்து மத்திய குழு உறுப்பினரின் ஆதர வோடு பொதுச் செயலாளரானார்.

தலைவர் மாவோ, சீன நாட்டில் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை சீன நாட்டின் சூழலுக்கு ஏற்றவகையில் அணுகி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஊடாகத் தீர்வு கண்டார். சீனாவில் ஆறு சதவீதத்தினரே ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுபான்மை இனத்தவர் களாயுள்ள போதும் அவர்களுக்குச் சுயாட்சி வழங்கப்பட்டுள்ள துடன், சீன அரசியல் சட்டம் சீனா பல இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்றும் சகல இனங்களும் சமமானவை என்றும் கூறு கிறது. சிறுபான்மை இனங்களின் உரிமை தொடர்பாக விரிவான பிராந்திய சுயாட்சி அமைப்பு முறை அரசியல் யாப்பு வழியாக நடை முறையில் இருந்து வருகிறது.

பலஸ்தீன மக்கள் போராட்டத்தை உறுதிமிக்க இடதுசாரிகளின் தலைமையின் கீழ் முன்னெடுப்பதன் மூலமே தமது சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டிப் பலஸ்தீனத்தை வென்றெடுத்து முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். அவர்களின் நியாய மான போராட்டத்திற்கு அனைத்துலக முற்போக்குச் சக்திகளின் ஆதரவுண்டு.



படிப்பகம்

# இஸ்ரேல்-பலஸ்தீன சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| கி.மு 1800 அளவில்: | மொசப்பெத்தேமியாவின் (இப்போதைய ஈராக்) 'ஊர்' என்ற இடத்திலிருந்து ஏபிரம் (ஏபிரகாம்) கனன் நாட்டை நோக்கிப் புறப்பட்டார். |
| கி.மு. 1250 அளவில்: | மோசசும் அவனைச் சேர்ந்தவர்களும் கனன் நாட்டை நோக்கிப் புறப்படல். |
| கி.மு 1077 | மன்னராட்சி |
| கி.மு. 950 | மோறியா மலையில் யூதக் கோவில் கட்டப்பட்டது. |
| கி.மு. 922 | போட்டி யூதா ஆட்சி |
| கி.மு. 607 | அக் காலத்து வல்லரசான பாபிலோனியர் ஜெரூசலம் கோவிலைக் கைப்பற்றுதல். பல யூதர்கள் நாட்டை விட்டு வெளியேறுதல். |
| கி.மு.586 | யூத கோவில் பாபிலோனியரால் அழிக்கப்பட்டது. 70 ஆண்டுகளின் பின் கோவில் மீளக் கட்டப் பெற்றது. |
| கி.மு. 539 | பாரசீகத்தின் சைரஸ் மன்னன் பாபிலோனியரைத் தோற்கடித்து நாட்டைக் கைப்பற்றுதல். வெளியேறிய யூதர்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டனர். |
| கி.பி. 50 | யூத மதம் இக்காலப் பகுதியில் ரோமானியப் பேரரசின் கீழ் சிறுபான்மையினரின் வழிபாட்டு முறையாய் இருந்தது. ரோமானியப் பேரரசில் யூதரிடையே கிறிஸ்துவத்தின் தோற்றம். |
| கி.பி .70-395 | நேரடி ரோமானிய ஆட்சி. |
| கி.பி. 195-638 | சக்ரவர்த்திகளின் ஆட்சி (Byzantine rule) |
| கி.பி. 638-1072 | அராபியர் ஆட்சி. கி.பி. 691ல் முஸ்லிம்கள் ஜெருசலமில் அழகான குவிமாடத்தை கட்டினர். 20 வருடங்களின் பின் அல் அக்ஷா மசூதியைக் கட்டினர். |
| கி.பி . 1072 | செல்யுக் ஆட்சி |

padippakam

| | |
|---|---|
| கி.பி. 1099-1291 | சிலுவை யுத்தம் மேற் கொண்டவர்களின் ஆட்சி |
| கி.பி. 1291-1516 | முஸ்லிம் படையினர் ஆட்சி |
| கி.பி.1517-1917 | ஒத்தோமான் துருக்கிய ஆட்சி |
| 1920 (22)- 1948 | லீக் ஒவ் நேஷன்ஸ் ஆணைப்படி பிரித்தானிய நிர்வாகம் |
| நவம்பர் 29, 1947 | பலஸ்தீனத்தை யூத, அரபு என்ற இரு அரசுகளாகப் பிரிப்பதென்றும் ஜெரூசலத்தை சர்வதேசக் கட்டுப் பாட்டில் விடவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்தது. இத்திட்டத்தை யூதர்கள் ஏற்றுக் கொண்டனர். அராபியர்கள் நிராகரித்தனர். |
| மே 14, 1948 | இஸ்ரேல் தனி நாடாகச் சுதந்திரப் பிரகடனம் செய்தது. |
| மே 15, 1948 | பிரித்தானியாவின் அதிகாரம் முடிவுக்கு வந்தது. பலவீனமான ஐந்து அரபு நாட்டுப் படைகள் இஸ்ரேலை ஊடுருவின. |
| யூலை 26, 1956 | சூயெஸ் கால்வாயை நாசர் தேச உடமையாக்கினார். |
| ஒக்டோபர் 29, 1956 | இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியது. |
| 1964 | பலஸ்தீன விடுதலை இயக்கம் உதயமானது. |
| 1967 | செங்கடல் மார்க்கத்தை இஸ்ரேலுக்கு எகிப்து தடை செய்ததைத் தொடர்ந்து ஆறு நாள் யுத்தம். |
| | இஸ்ரேல் பலநாட்டு அரபு படைகளைத் தோற்கடித்து ஜெரூசலத்தை இணைத்துக் கொண்டதுடன், சினாய், மேற்கு கரை, காசா, கோலான் (சிரியா) குன்றுப் பகுதியையும் கைப்பற்றியது. |
| ஒக்டோபர் 1973 | ஐந்தாவது அரபு-இஸ்ரேலிய யுத்தம் (யொம் கிப்பூர்) |
| மார்ச் 26, 1979 | வாஷிங்டனில் எகிப்திய இஸ்ரேலிய சமாதான உடன்பாடு, இதுவே காம்ப் டேவிட் உடன்பாடெனப் பட்டது. |
| ஏப்பிரல் 1982 | சினாய் உத்தியோக ரீதியாக எகிப்திடம் கையளிக்கப் பட்டது. |



படிப்பகம்

லெபனானில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத்தினரின் வதிவிடங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது. அதைத் தொடர்ந்து தெற்கு லெபனானில் 'பாதுகாப்பு வலயத்தை' ஏற்படுத்தியது.

| | |
|---|---|
| **டிசம்பர் 1987** | மேற்குக் கரையிலும், காசா நிலப்பரப்பிலும் இஸ்ரேலிய ஆட்சிக்கு எதிராக பலஸ்தீன 'இன்ரிஃபாடா' எனப்படும் வெகுஜனக் கிளர்ச்சி ஆரம்பமானது. |
| **1993** | ஒஸ்லோவில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி அப் பகுதியில் பலஸ்தீனிய சுயாட்சிக்கு வழி வகுக்கப்பட்டது. |
| **ஒக்டோபர் 1994** | இஸ்ரேலுக்கும் ஜோர்டானுக்குமிடையே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. |
| **ஒக்டோபர் 1995** | இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்குமிடையே (ஒஸ்லோ 2) இடைக்கால உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது. |
| **2007** | ஹமாஸ் இயக்கம் காசாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து காசா நிலப்பரப்பு இஸ்ரேலின் முற்றுகைக்குள்ளானது. |

★ ★ ★

padippakam

<u>பயன்படுத்திய நூல்கள்</u>

1. விவிலியம், பழைய ஏற்பாடு

2. **Judaism: A Very Short Introduction,** Norman Soloman- Oxford UniversityPress-1996

3. **World Religions: A Guide to the Faiths that Shape the World,** Lion Manual, UK, Myrtle Langley, 1993

4. **What does the Bible Really Teach?**, Watch Tower Bible and Tract Society of New York, 2006

5. **Mankind's Search for God**, Watch Tower Bible and Tract Society of New york, 1990

6. **Arab- Isreali Wars, Wars that changed the World** Ken Hills, Cherrytree edition, 1991

7. **The Arab- Isreali Conflict,** Paul Harper, 1989

8. **Sharing the Promised Land,** Dilip Hiro, Trafalgar Square, 1996

9. **Churchill and the Jews,** Martin Gilbert, Henry Holt, New York, 2007



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



இஸ்ரேலின் உருவாக்கம் என்னும் இவ் ஆய்வு நூலை எழுதிய ஞா.சிறிமனோகரன் ஒரு பொது வுடைமைவாதியாவார். யாழ் - இந்துக் கல்லூரி மாணவக் காலத்தில் பொதுவுடைமை முன்னோ டியான மு.கார்த்திகேசனின் கருத்துக்களாலும் வாழ்வாலும் ஈர்க்கப்பட்டு 60களின் முற்கூறில் புரட்சிகர பொதுவுடைமை இயக்கத்தில் தன்னை இணைத்து கொண்டவர். அதன் தொடர்ச்சியாக இன்றும் புதிய - ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியிலும் ஒருவராகச் செயல்பட்டு வருபவர்.

கடந்த காலத்தில் பல்வேறு அரசியல் வெகுஜன இயக்கங்களில் முன்னின்று மக்கள் பிரச்சனை களுக்காக செயல்பட்டு வந்தவர். தொழிலாளி, செம்பதாகை பத்திரிகைகளில் எழுதிவந்த இவர் அவற்றின் தொடர்ச்சியான புதிய பூமியில் பொரு ளாதார, அரசியல் கட்டுரைகளை எழுதிவரு கிறார். இஸ்ரேலின் உருவாக்கம் என்னும் இவ் ஆய்வு நூலை வெளியிடுவதன் மூலம் இஸ்ரேல் பற்றிய வரலாற்று உண்மைகளை தகுந்த சான் றுகளுடன் வழங்கியுள்ளார்.

படிப்பகம்